விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 27 வியாழக்கிழமை (11.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

## யாழில் ஆரம்ப பாடசாலை மாணவிக்கு கொரோனா

### கடந்த திங்கட்கிழமை வரை பாடசாலை சென்றுள்ளார்

(யாழ்ப்பாணம்)
யாழ்.நகரிலுள்ள முன்னணி ஆரம்ப பாடசாலையின் மாணவி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.
தரம் 5 புலமைப் 19

யாழில் தீவிரமாக பரவும் கொரோனா

## சிவராத்திரி வழிபாடுகளை அவதானமாக கொண்டாடுமாறு அறிவுறுத்தல்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவிர மடைந்துவரும் கோவிட்-19 பரம்பல் காரணமாக இன்றைய சிவராத்திரி நாள் வழிபாடுகளை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துமாறு வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.
இந்து மதகுருமார் 19

## விபரீத முடிவெடுத்த முதியவர் மரணம்

### அராலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியில் வசித்து வந்த முதியவர் ஒருவர் விபரீத முடிவெடுத்ததில் உயிரிழந்துள்ளார்.
இது தொடர்பாக மேலும் தெரியவருகையில், குறித்த முதியவர் 19

# யாழை அச்சுறுத்தும் கொரோனா தொற்று

## நேற்றும் 20 பேருக்கு தொற்று உறுதி

- தெல்லிப்பழையில் மூவர்
- யாழ்.நகரில் இருவர்
- கோண்டாவில் இ.போ.ச சாலையில் இருவர்
- காரைநகர் இ.போ.ச சாலையில் இருவர்
- நல்லூரில் மூவர்
- யாழ்.சிறையில் ஐவர்

வடக்கு மாகாணத்தில் மேலும் 27 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று புதன் கிழமை கண்டறியப்பட்டுள்ளது.
அவர்களில் 20 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் ஒருவர் கிளிநொச்சி மாவட்டத்திலும் 6 பேர் வவுனியா மாவட்டத்திலும் கண்டறியப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடத்தில் 368 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 20 பேரின் மாதிரிகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
அவர்களில் 27 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 20 பேருக்கு கோவிட் - 19 நோய்த் தொற்று 19



மஹா சிவராத்திரி இன்று

## அம்பாள்குளத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட்டுள்ளார்

### பெண் கர்ப்பம் தரித்துள்ளமையும் மருத்துவ அறிக்கையில் கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி அம்பாள்குளத்திலிருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்ட பெண் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக உடல் 19

## கிளிநொச்சியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு



(கிளிநொச்சி)
கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
குறித்த விபத்து சம்பவம் நேற்று பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 19

## 141 கிலோ கஞ்சா எழுவைதீவில் மீட்பு

### மன்னாரைச் சேர்ந்த இருவர் கைது

(அராலி)
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுவைதீவு பகுதியில் நேற்றுக் 19

நாம் 11 ஆண்டுகள் காத்திருக்கிறோம்

## ஈஸ்டர் தாக்குதலுக்கு கிறிஸ்தவர்கள் 2 ஆண்டுகளில் சர்வதேச விசாரணையையே கோருகின்றனர்

### சபையில் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)
இறுதி யுத்தத்தில் எமது மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும், பொறுப்புக்கூறலை நிறைவேற்ற வேண்டும் என பதினொரு ஆண்டுகளாக நாம் வலியுறுத்திக் கொண் 19

## வாக்குமூலம் பெறச் சென்ற பொலிஸார்

### வழங்க மறுத்த வேலன் சுவாமிகள்

(யாழ்ப்பாணம்)
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் பேரணி தொடர்பில் வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப் 19

## கொரோனா 4 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தொற் 19

## யாழ்.நகரில் கருவாட்டுக்கடை நடத்துநருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நகரில் கே.கே.எஸ் வீதியில் கருவாட்டுக்கடை நடத்தும் ஒருவருக்கு கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் அவருக்குத்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ம-3,18,33)

# NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA.

## 2023 A/L
## கணித, உயிரியல் பிரிவு
நேரடி வகுப்புக்கள், நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ் மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு. S. சோதிலிங்கம் | Mr. S. Sothilingam |
| திரு. M. குகனேஸ்வரன் | Mr. M. Kuganeswaran |
| திரு. G. பிரபா | |
| திரு. N. கபிலன் | |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| MR. G. BENO | MR. G. BENO |
| Mr. T. சுசாந்தன் | Mr. S.V. Selvaranjan |
| Mr. S.T. உமாசங்கர் | |
| Mr. K. சிவத்திரன் [ நிகழ்நிலை வகுப்பு ] | |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு. V.S. குணசீலன் | Mr. V.S. Gunaseelan |
| திரு. K. ராகவன் | Mr. S.P. Naganathan |
| திரு. T. கெங்காதரன் | |
| **COM. MATHS** | **COM. MATHS** |
| திரு. P. செந்தில்நாதன் | Mr. P. Senthilnathan |
| திரு. S. சிவகரன் | Mr. S. Sivakaran |

ஆரம்பம் : 14.03.2021
ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி
(C-1654)
☎-077 791 7611, 076 569 3006

# A/L 2023
கலை|வர்த்தகம்
கணிதம்|உயிரியல்

## NEC
(C-1658)
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

ஆரம்பம் 12.03.2021 வெள்ளி காலை 9.00 மணி

குறிப்பு: A/L 2023ல் புதிதாக இணையவுள்ள மாணவர்கள் தமது பாடத் தெரிவினை மேற்கொள்ளுவதற்கும் மாணவர் முன்னேற்றத்தை சிறப்பாக வழிநடாத்தவும் கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பாடங்களின் புலமை வாய்ந்த ஆசிரியர்களினால் மார்ச் மாத கட்டணமின்றி விசேட வழிகாட்டல் சேவை வழங்கப்படுகின்றது.

A/L 2021, 2022, DAY CLASS
வகுப்புக்கள் நடை பெறுகின்றன..
Tel: 076 166 1986

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
பகல், இரவு கடமைக்கு ஆண்கள் தேவை.
30 - 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.
( யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.)
(8)
**076 097 3121**

## காணி விற்பனைக்கு
யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) பருத்தித்துறை வீதியில் இருந்து 40 மீற்றர் நடை தூரம் விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தேவையில்லை)
(6105)
**077 596 3845**
**076 640 0974**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அருந்திராதேவி (சித்திரா) சிவசுப்பிரமணியம்

அன்னை மடியில் : 04.04.1957 | ஆண்டவன் அடியில் : 15.03.2018

**திதி : அபரபக்க திரயோதசி**

ஆண்டு மூன்று சென்றாலும் அம்மா
ஆறவில்லை எம் மனத்துயரம்
அகிலத்தில் நாம் தலைநிமிர அயராது
உழைத்தீரே. எம்மோடு இருப்பீரென நினைத்தோம்
காலன் கணக்கு வேறாகிவிட்டதே. தப்பாத காலச்
சுழற்சி. அதில் நீங்களும் கலந்தீர்கள். மங்காத
உங்கள் புன்னகை பூத்தமுகம் நாம் இப்பூமியில்
வாழும்வரை எம்மனங்களை விட்டகலாது தாயே.
பாசமுள்ள தாயாய் நல்லறிவூட்டும் ஆசானாய்
உங்கள் நலம் கருதாது எங்களுக்கென வாழ்ந்தீர்கள்.
எங்களுக்கொரு தாய்போல் தனக்கில்லையென இறைவன்
நினைத்தானோ. அதனால்தான் எங்களிடமிருந்து
தங்களைக் கவர்ந்தானோ? நாம் வாழ்க்கையில்
உயர்ந்திட ஏணிப்படியாய், அச்சாணியாய்
இருந்தீர்கள். உங்களுடைய ஆன்மா சாந்தியடைய
இறைவனைத் தினம் தினம் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

பிரிவுத் துயருடன்
குடும்பத்தினர்.

(6082)

AL -2023
கணித,உயிரியல் பிரிவு
தமிழ்மொழி மூலம்
ZOOM ஊடாக
ஆரம்பம் : 14.03.2021

இணைந்த கணிதம்
S.Premnath (B.Sc)
Sat & Sun : 6.00 pm - 8.00 pm
V.Rajaratnam
Sat & Sun : 5.15 pm - 6.45 pm

உயிரியல்
V.Umashanger (B.Sc)
Wed & Sun : 6.00 pm - 7.30 pm
R.Mahima (B.Sc)
Tue : 8.00 pm - 9.30 pm

பௌதீகவியல்
S.R.Jeyakumar (B.Sc)
Wed,Thu & Fri : 8.00 pm - 9.00 pm

இரசாயனவியல்
V.Parameswaran (B.Sc)
Mon,Tue &Sat:8.00pm-9.00 pm

ICT
R.Mathisugan (B.Sc)
Wed : 2.30 pm - 4.30 pm

தொடர்பு :-
Noble Academy
6C,Ramakrishna Terrace
Wellawatte, Colombo - 06
TEL : 011 236 3831 / 011 236 0848
Whatsapp Message Only 076 758 0659

AL -2023
Maths & Bio Stream
English Medium
Through ZOOM
Commencing on
14.03.2021 Sunday

Physics
S.Srikanagasabai (M.Sc)
Tue & Fri : 6.00 pm - 7.30 pm

Chemistry
S.V.Selvaranjan (B.Sc)
Fri : 8.00pm - 9.30pm
Wed : 6.00 pm - 7.30 pm

Biology
R.Mahima (B.Sc)
Wed & Sun : 8.00 pm - 9.30 pm

Com.Maths
V.Rajaratnam (B.Sc)
Sat & Sun : 8.30 am - 10.00 am
S.Premnath (B.Sc)
Sat & Sun : 8.00 pm - 10.00 pm

ICT
R.Mathisugan (B.Sc)
Wed : 2.30 pm - 4.30 pm

தொடர்பு :-
Noble Academy
6C,Ramakrishna Terrace
Wellawatte, Colombo - 06
TEL : 011 236 3831 / 011 236 0848
Whatsapp Message Only 076 758 0659

# வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் போராட்டம் தொடர்கிறது



(நல்லூர்)

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் போராட்டத்தை முன்னெடுத்துவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் போராட்டம் 10ஆவது நாளாக தொடர்கின்றது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த தமக்கு எவருமே தீர்வினை வழங்காத நிலையில் கடந்த திங்கட்கிழமை முதல் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்பு போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 2019ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் எடுத்த முயற்சியின் பயனாக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த தொண்டர்களாக கடமையாற்றிய சுகாதார பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் முகமாக சுகாதார பணியாளர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

எனினும் குறித்த நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட சுகாதார பணியாளர்கள் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக குறித்த நியமனங்கள் அனைத்தும் இடைநிறுத்தப்பட் டுள்ள நிலையில், நிரந்தர நியமன கடிதம் பெற்ற சுகாதார பணியாளர்கள் 454 பேர் தமக்கு உரிய தீர்வினை வழங்குமாறும் நீண்டகாலமாக தொண்டு அடிப்படையில் வைத்தியசாலைகளில் கடமையாற்றியதாகவும் எனவே தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் தியாகராஜா (கிரி)

காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மார்க்கம், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா ஆறுமுகம் (கிளி) நேற்று முன்தினம் (09.03.2021) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்தையாபிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் யுகேந்திரன் (மயூரன்), கவிதா, சயனுதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கந்தசாமி, சுப்பிரமணியம், விமலாதேவி, அம்பலவாணர், நடராஜா, தங்கமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராணி, தனலட்சுமி, காலஞ்சென்ற கந்தையா, இராஜேஸ்வரி, சுபத்திரா, நாகரத்தினம், காலஞ்சென்ற தர்மராஜா, புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலா கனகலிங்கம், காலஞ்சென்ற பாலாசந்திரன், தம்பிராஜா, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், பாலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நிகழ்வுகள் :**

**கிரியை**
Thursday, March 11, 2021
From 6.00 a.m to 7.30 a.m
Chapel Ridge Funeral Home
8911 Woodbine Avenue
Markham, ON
L3R 5G1

**தகனம்**
Thursday March 11, 2021
at 8.00 a.m
Highland Hills Crematorium
12492 Woodbine Avenue
Gormley, ON
L0H 1G0

**நேரடி ஒளிபரப்பு (Live Stream)**
https://video.ibm.com/channel/chapelridgeth2

**தொடர்புகளுக்கு**
இராஜேஸ்வரி (மனைவி) : 647 673 7253
யுகேந்திரன் (மகன்) : 647 606 2658
கந்தசாமி (சகோதரன்) : 416 569 1421
அம்பலவாணர் (சகோதரன்) : 905 471 4126
நடராஜா (ராசன்) (சகோதரன்) : 613 864 1156
தம்பிராஜா (மைத்துனர்) : 94 77 730 1961
பாலேஸ்வரி (மைத்துனி) : 94 77 297 7651

தகவல் : குடும்பத்தினர்

(6112)



பிறப்பு 02.01.1955 இறப்பு 09.03.2021

# மணி விழா வாழ்த்தும் பிறந்ததின வாழ்த்துக்களும்

எமது பாடசாலையில் கடமையாற்றி பாடசாலையின் உயர்ச்சிக்கும் க.பொ.த.சா.தரம் பரீட்சையில் 100% சித்திகளை பெற்றுத்தந்தும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிற்க்கும் அயராது பணியாற்றி இன்று (11.03.2021) வியாழக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியைகள் இருவரையும் வாழ்த்துவதோடு அவர்களின் ஓய்வுக் காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.





**திருமதி பத்மாசனி செல்வராஜா**
பயிற்றப்பட்ட ஆசிரியை SLTS II
**மனைப் பொருளியல் பாட ஆசிரியை**

**செல்வி கனகரட்ணம் இராசாத்தி**
பயிற்றப்பட்ட ஆசிரியை SLTS I
**சித்திரப் பாட ஆசிரியை**

சேவை விபரம்

யா / சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
01.10.1992 - 14.04.1998
வ / இராஜேந்திரகுளம் மெ.மி. வித்தியாலயம்
08.03.2010 - 31.12.2012
யா/ சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம்
02.01.2013 - 14.05.2014
யா / சுரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம்
15.05.2014 - 05.04.2018
யா / உயரப்புலம் மெ.மி.வி. ஆனைக்கோட்டை
06.04.2018 - 11.03.2021 வரை

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி
26.03.1990 - 28.05.2013
யா / வண்ணை நாவலர் வித்தியாலயம்
29.05.2013 - 05.03.2016
யா / உயரப்புலம் மெ.மி.வி. ஆனைக்கோட்டை
06.03.2016 - 11.03.2021

(6108)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / உயரப்புலம் மெ.மி.வி.
ஆனைக்கோட்டை

# வேலைக்கு ஆட்கள் தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்**
பிரபல பற் சிகிச்சை நிலையத்தில் உதவியாளராகவும் தாதியாகவும் பணி புரிவதற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

**முன் அனுபவம் இல்லாதவர்களும் பயிற்சிக்காக இணைந்துகொள்ள முடியும்.**

தொடர்புகளுக்கு:-
**075 975 9828, 075 975 9827**
**077 852 2401, 077 334 5395**



(6109)



## சிங்காரவேலன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதான

## மஹா சிவராத்திரி பெருவிழா உற்சவம்

நல்லூர் வீரமாகாளி அம்பாள் ஆலய வளாகத்தின் ஈசான பாகத்தில் அமைந்துள்ள சிங்கார வேலன் சிவகாயத்திரி அம்பாள் சந்நிதானத்தில் நாளை மறுதினம் மஹா சிவராத்திரி பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. வியாழக்கிழமை மாலை ஆறு மணிக்கு பூஜை வழிபாடுகள் ஆரம்பமாகி தொடர்ந்து விஷேட திரவ்யஹோம வழிபாடுகள் நான்கு சாமமும் நடைபெறும். மாலை ஆறு மணி தொடக்கம் அதிகாலை ஐந்து மணிவரை அடியவர்கள் தமது கரத்தினால் மூலாலயத்தில் வீற்றிருக்கும் பிரமாண்டமான லிங்கேஷ்வர பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்து நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்து கொள்ள முடியும். பாலை அடியவர்களே கொண்டு வருதல் வேண்டும். நெய்தீபம் ஆலயத்தில் வழங்கப்படும்.

(C-1656) **ஆலய பரிபாலன சபையினர்**

# மரண அறிவித்தல்

## நாகநாதர் சிவஞானம் (ராசா)

### (ஓய்வுபெற்ற CTB காப்பாளர்)

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 07.06.1943 | 10.03.2021 |

ஏழாலை மேற்கு, புளியங்கிணத்தடி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இல.76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் (மிலேனியம் விருந்தினர் விடுதி) கொண்ட நாகநாதர் சிவஞானம் (ராசா) நேற்று (10.03.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் - பாறுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் நல்லதம்பி - ஞானாம்பிகையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பவளக்கொடியின் அன்புக் கணவரும் சீவரத்தினம், கனகமணி, சிவலிங்கம், சிவாநந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காந்தரூபன், சாந்தினி (மிலேனியம்), ஜெயரூபன் (லண்டன்), ஜெயந்தினி (கனடா), சிவரூபன் (லண்டன்), கஜரூபன் (லண்டன் Thurka Exports) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தங்கேஸ்வரி, மகாராசா, நாகேஸ்வரி, சிவபாதசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா, சரஸ்வதி, கந்தசாமி மற்றும் சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயகௌரி, சுகுமாரன் (மிலேனியம்), எழிலரசி (லண்டன்), அருட்செல்வன் (கனடா), மிதுனாலினி (லண்டன்), மடோனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஸ்னுஜா, துஸ்ஜா, சானுகா, வனோஜ், நிவேஸ், மானஸ்வி, கரிகாலன், பவன்னா, அஷ்சயா, அகல்யா, சாயுரி, நிவேதி, சேயுஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.03.2021) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இராமநாதன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஏழாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு அதன் பின்னர் பூதவுடல் தகனக் கிரியைக்காக ஏழாலை மேற்கு உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.



**மிலேனியம் விருந்தினர் விடுதி,**
**077 601 6310, 077 243 1310**

(C-1660)

தகவல்:

சாந்தரூபன் குடும்பம்
சுகுமாரன் சாந்தினி குடும்பம்
ஜெயரூபன் குடும்பம்

அருட்செல்வன் ஜெயந்தினி குடும்பம்
சிவரூபன் குடும்பம்
கஜரூபன் குடும்பம்

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் வாக்களிப்பில் இருந்து விலகும் இந்தியா?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 46 வது அமர்வில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மீதான வாக்களிப்பை இந்தியா தவிர்க்கக் கூடும்.

இந்தவாரம் இலங்கை தொடர்பாக கோர் குழுவால் நகர்த்தப்படவுள்ள தீர்மானத்தில் இந்தியா வாக்களிக்கும் சாத்தியம் இல்லை என உயர் மட்ட அதிகாரிகளை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படவுள்ள திருத்தங்கள் அடங்கிய பிரேரணை அண்மையில் சில ஊடகங்களினால் பகிரங்கப்படுத்தப்பட்டன.

அதில், அரசியல் தீர்வு காணவும், இலங்கையில் நீடித்த அமைதி மற்றும் வளர்ச்சியைக் கொண்டுவரவும் 2009 மே 26 அன்று அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் ஆகியோரால் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கை தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கு பொறுப்பானவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்தல் மற்றும் தண்டித்தல் உள்ளிட்ட பரிந்துரைகள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து தரப்பினரும் இலங்கையில் செய்த அனைத்து மீறல்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையின் முக்கியத்துவத்தை குறித்த வரைவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி, பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான அமைப்பு கடந்த இரு தினங்களுக்கு முன்னர் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி-4)


## கேள்வி அறிவித்தல்
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம்
### பருத்தித்துறை நகரசபை

01. தலைவர் உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை வடமாகாணம் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் **(CIDA)** வீதி/கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ் குறிப்பிடும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை இல.04/2016 (ii) இற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் **(Black list)** சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/செயலாளர், பருத்தித்துறை நகரசபை, (தொலைபேசி: 021 226 3213, fax: 021 226 0233) இலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 25.03.2021 ஆம் திகதிவரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (SHEDULE- 5) பகுதி 5 இல் தரப்பட்டுள்ளது.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர் பருத்தித்துறை நகரசபை எனும் முகவரியில் 11.03.2021 ஆம் திகதியிலிருந்து 25.03.2021 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் **(Original and Copy)** நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 26.03.2021 ஆம் திகதி பி.ப. 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணையினையும் கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. கீழ் காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 63 (அறுபத்து மூன்று) நாட்களுக்கு (28.05.2021 வரை) செல்லுபடியாகும்.

09. கேள்வி பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

10. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 17.03.2021 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பருத்தித்துறை நகரசபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் வந்து பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூபா) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தராதரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பித்த இறுதி திகதியில் இருந்து | | வேண்டப்படும் கேள்விபிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் காலம் | திகதி | பிணை வைப்பு (&gh) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(5)/05 /PSDG/2021 | வெற்றுப் போத்தல்/மறுசுழற்சி கழிவு சேகரிப்பு மையக்கட்டுமானம் | 2.137 மில்லியன் | 90 நாட்கள் | C8 அல்லது அதற்கு மேல் (கட்டடம்) | 63 நாட்கள் | 28.05.2021 | 22,000.00 | 25.06.2021 |

அல்லது அதற்கு மேல் (கட்டடம்)

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகரசபை,
பருத்தித்துறை. வடமாகாணம். (C-1655)


# குழு மோதலில் குடும்பஸ்தர் பலி

(புத்தளம்)

புத்தளம் கடையாக்குளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலில் கூரிய ஆயுதம் ஒன்றால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸ் நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் முள்ளிபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புறா வளர்ப்பில் ஏற்பட்ட பழைய பிரச்சினையே கொலையில் முடிவடைந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும், புத்தளம் தலைமையகப் பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள்

(ஹற்றன்)

நல்லதண்ணி தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்ற சென்ற மாணவர்கள் 10 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்ட மாணவர்கள் சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


# இந்தியக் கடற்பரப்பில் இலங்கையர் இருவர் கைது

(கொழும்பு)

இலங்கையர்கள் இருவர் தமிழக கடலோர பொலிஸாரினால் இந்திய கடற்பரப்பில் வைத்து நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டனர். (நி-4)


# கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட வட்டு மேற்கு AMTM School மற்றும் சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம், அராலி இந்துக் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற எம் சக ஆசிரியர்

அமரர்.திருமதி
**சிவநேசமலர் பாலசுப்பிரமணியம்**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயருறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு இழப்பால் துயருறும் குடும்பத்தாரிற்கு எமது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(6069)

**விஞ்ஞான ஆசிரியர் கழகம் வலிகாமம் கல்வி வலயம்.**

# ஒருங்கிணைப்பு கூட்டங்களில் அழைப்பில்லை

# விவசாய சம்மேளனம் அதிருப்தி

(நெளுக்குளம்)

**வவுனியாவில் இடம்பெறும் பிரதேசமட்ட ஒருங்கிணைப்பு குழுகூட்டங்களில் கலந்து கொள்வதற்கு விவசாய துறைசார்ந்த பிரதிநிதிகளிற்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என்று மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் சேதுகாவலர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியாவில் பிரதேச மட்டங்களில் இடம்பெறும் அபிவிருத்திக்குழு கூட்டங்களில் விவசாய பிரதிநிதிகளிற்கு அழைப்பு விடுக்கப்படாமையினால் விவசாயம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவை பொறுத்தவரை விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட மக்களே அதிகம் வாழ்கின்றனர். அதே போல அந்த துறைசார்ந்த பிரச்சினைகளும் இங்கு ஏராளம் உள்ளன. குளங்கள் தொடர்பாகவும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. எனவே அவற்றை வெளிப்படுத்தி அதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்படுத்தித்தரப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இம்முறை வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு மாத்திரமே எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணியில் இடம்பெற்ற பிரதேச மட்ட கூட்டங்களிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

அதன் தொடர்ச்சியாக மாவட்டமட்ட ஒருங்கிணைப்புகுழுக் கூட்டங்களிற்கும் அழைப்பு விடுக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, விவசாயிகளின் பிரச்சினைகளை வெளிப்படுத்தி அதனை தீர்ப்பதற்கு மாவட்ட விவசாய சம்மேளனத்திற்கோ அல்லது விவசாயிகள் சார்ந்த பிரதிநிகளிற்கோ அபிவிருத்தி கூட்டங்களில் கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தரவேண்டும் என கேட்டுக் கொண்டார். (5-4-299)

# சிவராத்திரி தினவிழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண பிரதேச செயலகமும் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரர் ஆலய அறநெறி பாடசாலையும் இணைந்து நடத்தும் சிவராத்திரி விழா இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை கோட்டை ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயத்தில் இரவு 7 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வு யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் தலைமையில் நடைபெறும். (5)

• • • • • • • • • • • • • • • • •

(சாவகச்சேரி)

உடுவில்-மல்வம் குபேரகா கலை மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 5மணிக்கு மகா சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கலை மன்றத்தின் நிறைவேற்று இயக்குநர் ம.ரவிசங்கர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும்,

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், வட மாகாண பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ன மற்றும்இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆணையாளர் யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்து கொள்வர். இந்நிகழ்வில் சமூக சேவையாளர்கள், கலைஞர்கள் கௌரவிப்பு மற்றும் கலை நிகழ்வுகள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (5-4-30)

• • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தலையாழி அருள்மிகு சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையும், காமாட்சி அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் சிவராத்திரி விழா இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தலையாழி அருள்மிரு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அறநெறிப்பாடசாலை திறந்த வெளி அரங்கில் நடைபெறும்.

அறநெறிப்பாடசாலை அதிபர் கலாநிதி எஸ்.பி.காசிநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருந்துவர் சி.யமுனாநந்தாவும் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி. நகுலா ரபேந்திரராஜாவும் கலந்து கொள்வர். (5-4-6)

# உணவு தவிர்ப்புப் போராட்டம் 11 ஆவது நாளாகவும் தொடர்ந்தது

(நல்லூர்)

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 11 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.



நீதி வேண்டிய இந்த போராட்டம் நல்லூர் - நல்லை ஆதீனம் முன்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. (5-4-18-33)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு தென்மராட்சி சங்கத்தானை வைரவ சுவாமி கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

விசேட பூஜைவழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கௌரிசங்கரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறும் "ஆலயதரிசனம்"நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும்.(5-4)

# கொள்வனவு விலையை அதிகரிக்க பிரதமர் நடவடிக்கை

(சாவகச்சேரி)

உள்ளூர் விவசாயிகளின் நலன்கருதி உருளைக்கிழங்கிற்கான கொள்வனவு விலையை அதிகரிக்க நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார்.

அண்மையில் யாழ் .வந்திருந்த நிதி மூலதனச்சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலிடம் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விடுத்த கோரிக்கையின் பயனாக குறித்த விடயம் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிதிஆலோசனைக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு உருளைக்கிழங்கிற்கான கொள்வனவு விலையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் எதிர்காலத்தில் லங்கா சதொச நிறுவனத்தால் உருளைக்கிழங்கு கிலோ 100 -110 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனூடாக உள்ளூர் விவசாயிகள் ஊக்கத்துடன் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-4-30)




# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அழகக சங்கங்கள் மற்றும் சமாசங்களின் சம்மேளனத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி சேவாலங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக ஆ.உதயசங்கரும் செயலாளராக ஞா.சுரேந்தரும், பொருளாளராக வே.காண்டீபனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உப தலைவராக ம.யோகதாஸும் உப செயலாளராகஎஸ்.ஏ.டக்கிளஸும் ஆலோசகராக ச.றெஜியும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் 6 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (5-4)



மகளிர் தினத்தை முன்னிட்டு கலைமதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கலைமதி சனசமூக நிலையம், கலைமதி முன்பள்ளி மற்றும் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு என்பன இணைந்து யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் கடந்த திங்கட்கிழமை புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம்பெற்றது.

(படம்:- ரவிசாந்)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் இளவாலை புனித யூதாதேயு ஆலய முன்றலில் இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

இவ் இரத்ததான முகாமில் இளவாலை ஜே/155 இளைஞர் கழகத்தினரும், இளவாலை புனித யூதாதேயு ஆலய இளைஞர் கழகத்தினரும் இணையவுள்ளனர். (5-4)

# தபால் மூலம் மருந்துகள் விநியோகம்
## நிறுத்தப்படுவதாக தபால் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

**வைத்தியசாலைகளில் மாதாந்தம் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான மருந்துகளை தபால் ஊடாக வீடுகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் நிறுத்தப்படுவதாக தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.**

கொரோனா தொற்று நிலை காரணமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் கீழ், இதுவரை 17 இலட்சம் மருந்துப் பொதிகள் வீடுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக 170 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தற்போது கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், தபால் நிலையங்களின் செயற்பாடுகள் வழமைக்கு கொண்டுவரப்படவுள்ளதால் மருந்துப் பொதிகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதாக பிரதி தபால்மா அதிபர் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின் பேரில் தபால் ஊடான மருந்து விநியோகம் நிறுத்தப் படுவதாகவும் தபால் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி-4)

## கொவிட் தடுப்பூசி
# கொழும்பு,கம்பஹா
## மாவட்டங்களுக்கே முன்னுரிமை

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு கொவிட்-19 தடுப்பூசி மருந்து வழங்கும் திட்டம் நிறைவடைந்த பின்னரே ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர், மருத்துவ வல்லுநர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொழும்பு, கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி மருந்து வழங்கும் எந்த முடிவும் இதுவரை எடுக்கப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

"கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இருந்து தினமும் அதிக எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

கொவிட் -19 தடுப்பூசி செயல்முறை தொடர்ந்து அந்த இரு மாவட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்" என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (நி-4)

# விமல் வீரவன்சவிற்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரானையும் தன்னையும் தொடர்புபடுத்தி, அமைச்சர் விமல் வீரவன்ச வேண்டுமென்றே பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருவதாக றிசாத் பதியுதீன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும் குறித்த விடயம் தொடர்பாக நேற்று புதன்கிழமை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளதாகவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அதன்படி அவரிடம் விசாரணை செய்து, உண்மை நிலையை வெளிப்படுத்துமாறு சி.ஐ.டியினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் வெளிவந்துள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையிலும், தனக்கும் இந்த தாக்குதல் சம்பவத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் றிசாத் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் தனது அரசியல் இருப்புக்காக இவ்வாறு அப்பட்டமான பொய்யை கூறும் விமலுக்கு எதிராக சட்டத்தரணி ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனாக வழங்க சீனா முடிவு



(கொழும்பு)

இலங்கைக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்க சீனா அனுமதியளித்துள்ளது.

இக்கடன் தொகையை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ள முடியுமென நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். (நி-4)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 13½ செவ் 11 சூரி 9 இல்<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்: HND, Work- Do<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச தொழில் உள் நாடு மட்டும்<br>தொ.இ: B/11574 | பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: செவ்.சூரி 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:. பட்டதாரி B.Com,Work- அரச உத்தியோகம்<br>எதிர்பார்ப்பு: படித்த அரச, தனியார் உத்தியோகம், வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/11697 |
| பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 29 ¼ செவ் 7 சூரி 6 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: B.Sc Civil Engineer, Work- Project Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, உத்தியோகம். அழகிய படித்த தொழில் புரியும் பெண்,வெளிநாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/11575 | பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 36 செவ் 9 சூரி 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.Sc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.வெளி நாடும் விரும்பத்தக்கது.<br>தொ.இ: G/1926 |
| பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 19 செவ் 5 சூரி 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: B/11576 | பிறப்பு: 1972 இந்து நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 18 ¾ செவ் 9 சூரி 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர் (அரச)<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில், சுய தொழில், உள்நாடு மட்டும்.<br>தொ.இ: G/1940 |
| பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 28 செவ் 11 சூரி 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, சொந்த கடை வியாபாரம் எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11577 | பிறப்பு : 1981 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் சூரி 11 இல்<br>தகைமை/தொழில்: B.Sc (Bio Science) கனடா PRஉண்டு<br>எதிர்பார்ப்பு: உள்நாடும் வெளிநாடும் (படித்த உத்தியோகமுள்ள மணமகன் நன்று<br>தொ.இ: G/11688 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## விற்பனைக்கு

கொழும்பு செல்ல இருப்பதால் நல்இன சணல் பால் ஆடுகள், குட்டிகள் விற்பனைக்கு.

தொடர்பு 076 411 0156

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

## பெயர் மாற்றம்

ஜி.பி.எஸ்.வீதி கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்ட மரியதாசன் கிறிசாந் மோசஸ் ஆகிய எனது பெயரை மரியதாசன் சிவநீலன் என மாற்றம் செய்து இன்றுமுதல் என்சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகிறேன்.

உண்மையுள்ள
மரியதாசன் சிவநீலன்
(6085)

## அகவொளி : உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சிநெறி
## AHAVOLI: Diploma in Counselling Psychology 2021-2022

**சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள்:**

1. அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகம், கொல்வே, அயர்லாந்து.
2. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் NVQ-Level 5 சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**கற்கை நெறியின் விசேடத்துவம்:**

1. கற்கை நெறியை பூர்த்தி செய்பவர்கள் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் தொழில்வாண்மை மிக்க உள ஆற்றுப்படுத்துநர்களாக தொழில் வாய்ப்புப் பெறச் சந்தாப்பம்.
2. வளவாளர்களாக உளவியலில் கலைமாணி, முதுமாணி பட்டம் பெற்ற சிறந்த விரிவுரையாளர்கள்.
3. சிறந்த பாடநெறி, செயல்முறைப் பயிற்சி, சுய விழிப்புணர்வுப் பயிற்சிகள்.
4. பகுதிபகுதியாகக் கட்டணம் செலுத்தும் சலுகை

**காலம்:** ஒரு வருடம்
**மொழி மூலம்:** தமிழ்
**தகைமை:** க.பொ.த. (உயர்தரம்) சித்தி
**வயதெல்லை:** 20-40.
-துறைசார்ந்த பணிநிலையங்களில் பணியாற்றுவோருக்கு விதிவிலக்குண்டு.
**விரிவுரை நாட்கள்:** சனி, ஞாயிறு
**விண்ணப்ப முடிவு திகதி:** 10-04-2021
-க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகளை எதிர்பார்ப்போரும் விண்ணப்பிக்கலாம்
-விண்ணப்பப்படிவங்களை நேரடியாகவோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு: இயக்குநர் - 077 476 6891, செயலர் - 076 937 8476

அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் (M.Sc. Guidance & Counselling)
இயக்குநர்,
அகவொளி : குடும்பநல சேவை நிலையம்,
சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(6098)

# வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் பிரதான வீதியில் மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் காணப்படும் இரண்டு கிலோ மீற்றர் நீளமான வீதியினைப் புனரமைத்து தருமாறு வாகன சாரதிகள், பொது மக்கள், அரச ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒட்டுசுட்டானில் இருந்து தார் வீதியாக குறித்த வீதியின் மீதிப் பணிகள் ஆரம்பித்த போதும் இரண்டு பகுதிகளிலும் இடைநடுவில் இரண்டு கிலோ மீற்றர் தூரம் திருத்தப்பட்டாது தவறவிட்ட நிலையில் வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது.

மழை காலங்களில் குறித்த வீதியில் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதோடு ஏனைய காலப்பகுதிகளிலும் குண்டும் குழியுமாக காணப்படும் குறித்த வீதியில் பயணம் செய்யும் பொது மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே குறித்த சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான வீதியை புனரமைப்புச் செய்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5-4-281)

# மரநடுகை

(பூநகரி)

பூநகரி மக்கள் ஒன்றியம் பிரித்தானியா அமைப்பின் நிதியுதவியுடன் உதவும் கரங்கள் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற பசுமை காப்போம் மரம் நாட்டும் நிகழ்வு இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணியளவில் பூநகரிச் சந்தியில் ஆரம்பமாகும். (5-4-84)

# விழிப்புணர்வு கருத்தரங்கு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் இருபத்தொரு பொது அமைப்புக்களின் அனுசரணையோடு "தமிழ் மக்களின் எதிர்காலம் ஒரு குடித்தொகையின் நோக்கு" என்ற தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்டக் கூட்டறவு மண்டபத்தில் டாக்டர் மா.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம பேச்சாளராக யாழ்.பல்கலைக்கழக வருகை நிலை விரிவுரையாளர் டாக்டர் முரளி வல்லிபுரநாதன் கலந்துகொள்வார். (5-4-84)

# விசாரணைக்குட்படுத்தியமைக்கு எதிராக அமைதி வழி போராட்டம்



(முறிகண்டி)

கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் நாகேந்திரம் செல்வநாயகத்தை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைக்குட்படுத்த அழைக்கப்பட்டமையை கண்டித்து பிரதேச சபை அமர்வில் அமைதிவழிப்போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபை அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போது சபையின் உறுப்பினர் விசாரணைக்காக அழைக்கப்பட்டமையை கண்டித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாரையும் விசாரணைக்கு உட்படுத்துவதற்கு நாம் தடை அல்ல எனவும் அவ்வாறு விசாரணைக்கு உட்படுத்துவதாயின் கிளிநொச்சி மாவட்டத்திலேயே விசாரணைக்குட்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டு, குறித்த போராட்டத்தை முன்னெடுப்பதற்காக சபை உறுப்பினர் ஜீவராசா சபையிடம் கோரிக்கை முன்வைத்தார். அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததை அடுத்து சபை 5 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

இதன்போது சபை மண்டபத்தில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினரான நாகேந்திரம் செல்வநாயகம் நேற்று கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்ததாகவும் குறித்த செயற்பாடானது மக்கள் பிரதிநிதிகளை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகவும் தெரிவித்து குறித்த பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நேற்று குறித்த பிரதேச சபை உறுப்பினர் விசேட விடுமுறை பெற்று விசாரணைக்காக சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-100)

# நெல் உலரவிடும் தளம் வேண்டும்

(பூநகரி)

பூநகரி கமநல சேவை பிரிவில் நெல் உலர விடுவதற்கு போதுமான நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்படாமையினால் விவசாயிகள் பெரும் சிரமமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறைந்தது ஒவ்வொரு கமக்கார அமைப்புப் பிரிவிலும் ஒவ்வொரு தளமாவது அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-84)

# சிற்றுண்டிச்சாலை அமைக்க வேண்டுகோள்

(பூநகரி)

சகலவசதிகளையும்கொண்ட பூநகரி அரசினர் வைத்தியசாலையில் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுபவர்களினதும் தினசரி வெளி நோயாளர் பிரிவிற்கு வரும் நோயாளர்களின் நலன் கருதியும் ஒரு சிற்றுண்டிச்சாலை அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் ஒரு கி.மீ.தூரத்திலுள்ள நகரில் இயங்கும் கடைகளுக்கு செல்ல வேண்டிய நிலை இருப்பதாக மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி பூநகரி அபிவிருத்தி நிறுவனம், மாவட்ட சுகாதார சேவைப்பணிப்பாளருக்கும் பூநகரி வைத்திய அதிகாரிக்கும் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டது என பூநகரி அபிவிருத்தி நிறுவன தலைவர் க.குலசேகரம் தெரிவித்துள்ளார். (5-4-84)

# கோழி வளர்ப்புக்கான உதவிகள் வழங்கி வைப்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் ஆர்.5.என் **(R5N)** செயற்றிட்டத்தின் ஊடாக முதற்கட்டமாக 21 பயனாளிகளுக்கான கோழி வளர்ப்புக்கான கோழிக்கூடுகள், 41 நாட்கள் நிரம்பிய கோழிக்குஞ்சுகள், ஒரு மாத காலப்பகுதிக்கான தீவனங்கள் மற்றும் மருந்துகள் என்பன நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த பயனாளிகளுக்கு கோழி வளர்ப்புக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து ரூபா 90 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கோழிக்கூடும் சுமார் 22 ஆயிரத்து 300 ரூபாய் பெறுமதிக்குட்பட்ட 40 கோழிக்குஞ்சுகள் மற்றும் தீவனம், உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

உலக உணவுத் திட்டத்தின் இச்செயற்றிட்டமானது மக்களின் போசனை மட்டத்தினை உயர்த்தி அதனூடாக அம் மக்களின் போசாக்கான உணவினை, பொருளாதாரத்தை அவர்களே மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட உலக உணவுத்திட்ட பொறுப்பதிகாரியும் சமுர்த்தி பணிப்பாளருமாகிய திருமதி.ஜெ.கணேசமூர்த்தி, துணுக்காய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.வோல்டிசொய்சா, உலக உணவுத்திட்ட உத்தியோகத்தர்கள், கால்நடை வைத்திய அதிகாரி சி.ஆர்.குமார, கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் ஏ.கணேஸ்வரன், குறித்த கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-281)

# தொலைத் தொடர்பு கோபுர பணிகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா உக்குளாங்குளம் மக்கள் குடியிருப்பில் தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்ட்டு வருகின்றன.

இதற்கு அப்பகுதி மக்களின் எதிர்ப்புக் காரணமாக நேற்று முன்தினம் கோபுரம் அமைக்கும் இடத்திற்கு சென்ற நகர சபை தவிசாளர், செயலாளர் உள்ளிட்ட குழுவினரால் தற்காலிகமான தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்கும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

வவுனியா உக்குளாங்குளம் திருச்செந்தூரன் மில் வீதியில் மக்கள் குடியிருப்புப்பகுதியில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியதுடன் இவ்விடயம் குறித்து நகரசபையினருக்கு அறிவிக்கப்பட்டதுடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை உக்குளாங்குளம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் ஒன்றுகூடிய கிராம மக்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதையடுத்து கிராம அபிவிருத்திச்சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக தொலைத் தொடர்பு கோபுரம் அமைக்கும் பகுதிக்கு சென்ற குழுவினர் கோபுரம் அமைக்கும் நடவடிக்கையை தற்காலிகமாக தடுத்து நிறுத்துமாறு காணி உரிமையாளரிடம் அறிவுறுத்தினர்.

இது குறித்து ஏற்கனவே நகர சபையினரால் தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை அப்பகுதி மக்களின் கையெழுத்திட்ட முறைப்பாட்டுக் கடிதம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டு தொலைத் தொடர்புக் கோபுரம் அமைக்கும் பணிகளைத் தடுத்து நிறுத்துமாறு கோரிய முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்தே நேற்று முன்தினம் மக்களுடன் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# இராசிபலன்

11.03.2021
மாசி 27, வியாழக்கிழமை
திரயோதசி பிற்பகல் 3.39 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.34 மணிவரை
சுபநேரம் 7.53-9.23 மணிவரை
இராகுகாலம் 1.53-3.23 மணிவரை
சந்திராஷ்டமம்: புனர்பூசம், பூசம்
மகா சிவராத்திரி விரதம்

வளவன்


மேஷம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத் தேவைகள் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், ஆனந்தமான நாள், பொது வாழ்வில் புகழ் கூடும்.


ரிஷபம்

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும்.


மிதுனம்

ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும், பூர்வீகச் சொத்துக்களில் நன்மையுண்டு, தித்திக்கும் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.


கடகம்

இறைவழிபாட்டில் இன்பம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.


சிம்மம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கன்னி

இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும் நாள், செய்தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.


துலாம்

எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும் வாய்ப்புண்டு, கொள் கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வ புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


தனுசு

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வியாபார விரோதம் விலகும், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எதிர்கால நலனில் அக்கறை கூடும், குடும்பத்தில் சுகங்கள் அதிகரிக்கும்.


கும்பம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், போசன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.


மீனம்

எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

இன்று செய்ய முடிந்ததை நாளைக்கு ஒத்திப் போடாதே

# போதைப் பொருள் பாவனையாளர்களால் அதிகரிக்கும் திருட்டுகள்-பொலிஸார் அறிவுறுத்தல்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களால் தங்கச்சங்கிலிகள் கொள்ளையிடும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இவ்வாறு 3 பகுதிகளில் தங்கச்சங்கிலி கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித்ரோஹண தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் கடைகளுக்கருகில் மோட்டார் சைக்கிளை நிறுத்துவதைப் போன்றும் யாருக்காகவேனும் காத்திருப்பதைப் போன்றும், பேருந்து தரிப்பிடங்களில் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தியும் கொள்ளையடிக்கின்றனர். எனவே தனியாக வீதிகளில் செல்லும் பெண்களும், சனநடமாட்டம் குறைவான பிரதேசத்தில் செல்லும் பெண்களும் இவ்விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

## 'இந்து கலை களஞ்சியம்' வெளியிட்டார் பிரதமர்

(கொழும்பு)

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மீள்பதிப்புச் செய்யப்பட்ட பன்னிரண்டு தொகுதிகளைக் கொண்ட இந்து கலைக்களஞ்சியம் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதற்கமைய மீள்பதிப்புச் செய்யப்பட்ட இந்து கலைக் களஞ்சியத்தின் ஆரம்ப பிரதிகள் பிரதமரினால் இந்து மதகுருமார்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (நி-4)

# ஆளும் கட்சிக்கு ஒரு நீதி எதிர்க்கட்சிக்கு ஒரு நீதியா?

## ஐக்கிய மக்கள் சக்தி கேள்வி

(கொழும்பு)

பாராளுமன்றில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன கட்சி சார்பின்றி நடுநிலையோடு செயற்பட வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே பேசும்போது, அவரை முகக் கவசம் அணியுமாறு சபாநாயகர் வலியுறுத்தினார்.

அதேநேரம் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விகளுக்கு அமைச்சர் சமல் ராஜபக்ஷ முகக் கவசம் இன்றி பதிலளிக்க அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் சபாநாயகரின் இந்த பக்கச்சார்பான நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார சபையில் சுட்டிக்காட்டினார். அத்துடன், பாராளுமன்றில் சபாநாயகர் பக்கச்சார்பின்றி நடுநிலையுடன் செயற்பட வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார். (நி-4)



இலங்கை விமானப்படையின் பிரதானியாக எயார் வைஸ் மார்ஷல் பிரசன்னா பயோவை மார்ச் 09 முதல் அமுல்படுத்தும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

விமானப்படை தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற விழாவில், விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரனவிடம் இருந்து எயார் வைஸ் மார்ஷல் பிரசன்னா பயோ நியமனக் கடிதத்தைப் பெற்றார்.

# தடுப்பூசி பெற்ற பயணிகளின் தனிமைப்படுத்தல் முறையை மாற்ற தீர்மானம்

(கொழும்பு)

கொவிட் வைரஸ் தடுப்பூசி பெற்ற பயணிகளுக்கு தனிமைப்படுத்தல் செயல்முறையினை பரிசீலனை செய்யவுள்ளதாக சுகாதார அமைச்சினை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கொவிட் பணிக்குழு கூடிய போது இந்த திட்டம் குறித்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கொவிட் தடுப்பூசி பெற்ற பயணிகளுக்கு கட்டாய தனிமைப்படுத்தலுக்கு விலக்கு அளிக்க முடியுமா? என்று பரிசீலிக்க கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன் விளைவாக, கொவிட் தொடர்பான விடயங்கள் குறித்த சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழு இப்போது இந்த திட்டத்தைப் ஆராய்ந்து வருகிறது. பெரும்பாலான இலங்கையர்கள் தடுப்பூசியின் முதல் டோஸினை பெற்றுள்ளனர் ஏப்ரல்-மே மாதத்தில் இரண்டாவது டோஸினை பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து திரும்பும் இலங்கையர்களுக்கான தனிமைப்படுத்தப்பட்ட காலத்தைக் குறைப்பதற்கான திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய 14 நாட்களில் இருந்து தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை 10 நாட்களாக குறைக்க பின்னர் பரிந்துரைக்கப்பட்டது.

வணிகப் பயணிகளுக்கான தனிமைப்படுத்தப்பட்ட காலத்தை மறு ஆய்வு செய்வதற்கான திட்டமும் முன்வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)



# சிறுவர் அரங்கம்

## நாவினால் சுட்டவடு

ஒரு முன்கோபக்காரப் பையன் இருந்தான். முணுக்கென்றால் அவனுக்குக் கோபம் வரும்.

கோபம் வந்தால் தலை கால் தெரியாமல் வாய்க்கு வந்த படி வயது வரம்பில்லாமல் எல்லோரையும் பேசி விடுவான். பின்னர் அவர்களிடம் வருத்தப்படுவான்.

நாளடைவில் அவனை சுற்று வட்டாரத்தில் பலருக்கு இதனாலேயே பிடிக்காமல் போனது. அவனைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். பையனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று தோன்றினாலும் எப்படி என்றுதான் தெரியவில்லை.

அவனுடைய அப்பா பொறுத்துப்பொறுத்து பார்த்து விட்டு ஒரு நாள் அவனிடம் ஒரு வாளி நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியலையும் கொடுத்தார்.

ஒவ்வொரு முறை ஆத்திரப்படும் போதும் சம்பந்தப்பட்டவர்களைத் திட்டுவதைத் தவிர்த்து விட்டு வீட்டுக்குப் பின்னால் உள்ள மரவேலியில் ஒரு ஆணியை ஆத்திரம் தீரும் வரை அறைந்து ஏற்றி விடும்படி அறிவுரைத்தார்.

முதல் நாள் வேலியில் சுமார் 50 ஆணிகளை அறைந்து ஏற்றினான்.

நாட்கள் செல்லச்செல்ல அவனைக் கோபமூட்டுபவர்கள் முன் வன்மையாகப் பேசுவதைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொண்டான். கோபம் வந்தால்தான் உடனே ஆணி அடிக்கப் போக வேண்டுமே!

நாளடைவில் வாளியையும் சுத்தியலையும் எடுத்துக் கொண்டு வேலிப்பக்கம் போகு முன் கோபவெறி குறைந்து போய், வேலியில் ஆணி அறைவது குறையத் தொடங்கியது. சில நாட்களில் வேலியில் ஆணி அடிக்க வேண்டிய தேவையே அவனுக்கு இருக்கவில்லை.



அப்பாவிடம் போய் விபரத்தைச் சொன்னான். அவர் உள்ளுக்குள் மகிழ்ச்சியடைந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் ஒரு ஆணி பிடுங்கும் கருவியைக் கொடுத்து வேலியில் அவன் அடித்த ஆணிகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கச் சொன்னார். அனைத்தையும் பிடுங்க அவனுக்கு முழுதாக ஒரு நாள் பிடித்தது.

எல்லா ஆணியையும் பிடுங்கிய பிறகு அப்பாவும் மகனும் வேலியை பார்க்கப் போனார்கள். அப்பா வேலியில் ஆணிகளைப் பிடுங்கிய இடத்தில் இருந்த வடுக்களை மகனுக்குக் காட்டி "கோபம் வந்தால் அறிவிழந்து சொல்லும் சுடு சொல்லும் இந்த ஆணியைப் போலத்தான்.

ஆணியைப் பிடுங்குவது போல் நீ பேசியதற்கு மன்னிப்புக் கேட்டாலும், அந்த சொல் தைத்த இடத்தில் உள்ள வடு இந்த ஆணி ஏற்படுத்திய வடுவைப்போலவே மறைவது மிகக்கடினம்" என்று அவனுக்கு எடுத்துக் கூறினார்.

மகனும் கருத்தை நன்றாக உணர்ந்து திருந்தி ஊர் போற்றும் வகையில் வளர்ந்து வாழ்க்கையில் வெற்றிகள் பல பெற்றான்.

**பாடம் : தீயினால் சுட்ட புண் விரைவில் ஆறிவிடும். ஆனால் நாவினால் சுட்ட புண் ஆறாது, மாறாக வடுவாய் உள்ளத்தில் என்றும் இருக்கும்.**

# மகாபாரதம்

16



துரியோதனன்

பெண் துச்சலை. இவள் மகாபாரதக் கதாபாத்திரங்களில் ஒருத்தி. துரியோதனனின் சகோதரி. இவளது கணவன் பாரதப் போரில் அருச்சுனனால் கொல்லப்பட்டான். இவளுக்கு சுரதா என்னும் ஒரு மகன் இருந்தான்.

குருஷேத்திரப் போரின் பின்னர் தர்மனின் அஸ்வமேத யாகத்துக்காக சிந்து நாட்டுக்கு வந்த அருச்சுனனுடன் துச்சலையின் பேரன் போர் புரிந்தான். துரியோதனனது சகோதரியை தனது சகோதரியாகவே கருதிய அருச்சுனன் சுரதாவின் மகனைக் கொல்லாமல் சிந்து நாட்டை விட்டு அகன்றான்.

துரியோதனன், பேராசையும் பிடிவாதமும் உடையவனாக வளர்ந்தான். அவனை அடுத்து பிறந்த துச்சாதனன் தீமையில் அண்ணனை மிஞ்சினான்.

கடைசி தம்பியான விகர்ணன் தவிர அனைவரும் கொடியவர்களே. காட்டில் வாழ்ந்து வந்த பாண்டவர் ஐவரும் ரிஷிகளிடம் கல்வி கற்று அறிவுத்திறனை வளர்த்துக் கொண்டனர்.

இந்நிலையில், ஒரு நாள் காமவயப்பட்டு பாண்டு மாத்ரியை அணுகிய போது பண்டைய சாபத்தால் உயிரிழந்தான். மாத்ரியும் உடன் அவனுடன் இறந்தாள்.

குந்தியும் பாண்டவர்களும் பீஷ்மரிடம் வந்தனர். திருதராட்டினனும் அன்புள்ளவன் போல நடந்து கொண்டான்.

சத்யவதியும், அம்பிகையும், அம்பாலிகையும் தவத்தை நாடிச் சென்றனர். குருவம்சத்திற்குரிய மன்னனை நியமிக்கும் பொறுப்பு பீஷ்மரிடம் வந்தது.

ஆரம்பத்தில் பாண்டவர்கள், கௌரவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவே இருந்தனர். பல பல விளையாட்டுகளில் ஈடுபட்டனர்.

துரியோதனன் எல்லாவற்றிலும் தானே முதலில் வர வேண்டும் என நினைத்தான். ஆனால் அருச்சுனனும், பீமனுமே சிறந்து காணப்பட்டனர்.

பீமனது ஆற்றல் துரியோதனனுக்கு அச்சத்தையும் பொறாமையையும் கொடுத்தது. அதுவே காலப்போக்கில் பாண்டவர் அனைவரையும் வெறுக்கும் நிலைக்கு தள்ளியது.

தானே அரசராக வேண்டும் என துரியோதனன் எண்ணினான். ஆனால் யுதிஷ்டிரனே இளவரசுப் பதவிக்கு உரியவன் ஆனான்.

மனம் வெதும்பிய துரியோதனன் பாண்டவர்களை ஒழிக்க வழி தேடினான்.

ஒரு சமயம் ஆற்றங்கரையில் அனைவரும் விளையாடிக் கொண்டிருக்கும் போது பீமனுக்கு விஷம் கலந்த உணவைக் கொடுத்தான் துரியோதனன்.

அதனால் மயக்கமுற்றான் பீமன். துரியோதனன் உடனே அவன் கை, கால்களைக் கட்டி ஆற்றில் எறிந்தான். விளையாட்டு முடிந்து திரும்பியதில் பீமன் இல்லாது கண்டு குந்தி கவலையுற்றாள்.

(தொடரும்)

# உலகளவில் மூன்று பெண்களில் ஒருவர் வன்முறைகளுக்கு ஆளாகின்றனர்

## உலக சுகாதார அமைப்பு தகவல்

**(ஜெனிவா)**

**உலக சுகாதார அமைப்பின் புதிய அறிக்கையின் படி, உலகளாவிய ரீதியில் மூன்று பெண்களில் ஒருவர் தங்கள் வாழ்நாளில் வன்முறைகளுக்கு ஆளாவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.**




வன்முறையைத் தடுக்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளை மேம்படுத்தவும், பெண்கள் மற்றும் சிறுமிகளை அடிக்கடி தவறான உறவுகளில் சிக்க வைக்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைச் சமாளிக்கவும் சர்வதேச அரசாங்கங்களை வலியுறுத்தி ஐ.நா. நிறுவனம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்த ஆய்வை வெளியிட்டது.

கிரிபாஸ், பிஜி, பப்புவா நியூ கினியா, பங்களாதேஷ், கொங்கோ ஜனநாயக குடியரசு மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை இவ்வாறான வன்முறையை எதிர்கொள்ளும் முன்னணி நாடுகள் ஆகும்.

இவற்றுள் மிகக் குறைந்த விகிதங்கள் ஐரோப்பாவில் பதிவாகியுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (நி-4)

# மைக்றோ சொஃப்ற் மீது சைபர் தாக்குதல்




(வொஷிங்டன்)

அமெரிக்காவின் மைக்றோ சொஃப்ற் நிறுவனத்தின் மின்னஞ்சல் சேவையகங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக 30 ஆயிரம் அமெரிக்க நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-4)

# ட்ரோன்களை கொள்வனவு செய்ய இந்தியா தீர்மானம்

(டில்லி)

அமெரிக்காவிடம் இருந்து சுமார் 22 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 30 இராணுவ ஆயுத ட்ரோன்களை கொள்வனவு செய்ய இந்தியா தீர்மானித்துள்ளது.

சீனா மற்றும் பாகிஸ்தானுடனான உறவில் பதற்றமான சூழல் நீடிக்கும் நிலையில் இந்திய வான்வழி பாதுகாப்பை வலுப்படுத்த இந்த கொள்முதல் உதவிகரமாக இருக்கும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சாண்டியாகோவில் உள்ள ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து எம்கியூ 9-பிபிரிடேட்டர் என்ற ட்ரோன்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இந்த ட்ரோன்கள் தொடர்ந்து 48 மணி நேரம் பறக்கக் கூடியவை. 1700 கிலோ எடை வரையிலான ஆயுதங்களை அவற்றால் சுமந்து செல்ல முடியும்.

தென்சீன கடலில் சீன போர் கப்பல்களின் நடமாட்டத்தையும் இமாலய பகுதிகளில் இந்திய-பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் அத்துமீறுவதை தடுக்கவும் இந்த ட்ரோன்கள் பயன்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# படகு கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 39 பேர் கடலில் மூழ்கி உயிரிழப்பு

(துனிசியா)

சட்டவிரோத குடியேற்ற வாசிகளை ஏற்றிச் சென்ற இரண்டு படகுகள் தெற்கு துனிசியாவில் உள்ள ஸ்ஃபாக்ஸ் கடற்பரப்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மூழ்கி விபத்துக்குள்ளானதில் 39 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த அனைத்து குடியேற்றவாசிகளும் சகாரா-கீழமை ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள்.



துனிசியா துறைமுக நகரமான ஸ்பாக்ஸ்°க்கு அருகிலுள்ள கடற்கரைப்பகுதி ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் மோதல்கள் மற்றும் வறுமையிலிருந்து தப்பி ஐரோப்பாவில் சிறந்த வாழ்க்கையைத் தேடும் மக்களுக்கு ஒரு முக்கிய இடமாக மாறியுள்ளது.

துனிசிய குடியேறியவர்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் ஐந்து மடங்கு உயர்ந்து 13,000 ஆக உயர்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மகளிர் தின பேரணியில் வெடித்தது வன்முறை

## 80 பெண்கள் படுகாயம்

(மெக்சிகோ சிட்டி)

மெக்சிகோவில் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



உலகம் முழுவதும் கடந்த 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி மெக்சிகோவில் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தலைநகர் மெக்சிகோ சிட்டியில் ஆயிரக்கணக்கான பெண்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மெக்சிகோ சிட்டியின் மையப்பகுதியில் திரண்ட பெண்கள் ஜனாதிபதி மாளிகையை நோக்கி பேரணியாக சென்றனர்.

இதற்கிடையில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்திடாத வண்ணம் ஜனாதிபதி மாளிகையின் முன்பு பொலிஸார் இரும்பு சுவரை அமைத்தனர்.

மேலும் ஜனாதிபதி மாளிகையை சுற்றிலும் பெண் பொலிசார் பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டனர். இந்த நிலையில் ஜனாதிபதி மாளிகையை நெருங்கிய போராட்டக்காரர்கள் சுத்தியல், மரக்கட்டைகள் உள்ளிட்டவற்றால் இரும்பு சுவரை தகர்த்து கீழே தள்ள முயற்சித்தனர்.

பெண் பொலிஸார் அவர்களை தடுக்க முயன்றதால் இரு தரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. சற்று நேரத்தில் இந்த மோதல் பெரும் வன்முறையாக வெடித்தது. போராட்டக்காரர்களை விரட்டியடிக்க பொலிஸார் தடியடி நடத்தியதோடு கண்ணீர் புகை குண்டுகளையும் வீசி எறிந்தனர்.

அதேபோல் போராட்டக்காரர்கள் கையில் கிடைத்த பொருட்களை பொலிஸார் மீது வீசி எறிந்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

இந்த மோதலில் பெண் பொலிஸ் அதிகாரிகள் 62 பேரும், போராட்டக்காரர்கள் தரப்பில் 19 பெண்களும் படுகாயமடைந்தனர். அவர்கள் அனைவரும் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (நி-4)

# மகாத்மா காந்தி சிலை தற்காலிகமாக மூடப்பட்டது




(மதுரை)

மதுரை மாவட்டம் யானைக்கல் பகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் எனக்கூறி மகாத்மா காந்தி சிலை மூடப்பட்ட சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதனால் வீதியில் ஆங்காங்கே உள்ள அரசியல் கட்சி தலைவர்களின் சிலைகள் தற்காலிகமாக மூடப்பட்டன. இந்நிலையில் அரசியல் தலைவர்கள் எனக்கூறி மதுரை யானைக்கல் பகுதியில் உள்ள மகாத்மா காந்தியின் சிலையை தேர்தல் அலுவலர்கள் மூடியுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. தேச தந்தை மகாத்மா காந்தியை இழிவுபடுத்தும் வகையில் இது போன்ற செயல்களில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மேலும் காந்தி சிலை அருகே இருந்த நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் சிலையும் மூடப்பட்டிருந்த நிலையில் அந்தப் பகுதியில் உள்ள சிலர் எதிர்ப்பு தெரிவித்து அவர்களே சிலையை மூடிய துணியை அகற்றியுள்ளனர். ஆனால் மகாத்மா காந்தியின் சிலையில் உள்ள துணியை அகற்றாமல் மூடப்பட்டிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (நி-4)

# ஏமாற்றும் நுண்கடன் நிறுவனங்களால்

# 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை

(கொழும்பு)

**நுண்கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டு இதுவரை 200 இற்கும் மேற்பட்ட பெண்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். 2.8 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார முறையால் பெண் தொழில் முயற்சியாளர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். நிதி நிறுவனங்களால் பெண்கள் பாரியளவில் சூறையாடப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக நுண்கடன் நிதி நிறுவனங்களின் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாற்றப்பட்டு, பெற்றுக்கொண்ட கடனை செலுத்த முடியாத பலர் எமது நாட்டில் இருக்கின்றனர்.

மேலும் நுண்கடன் வழங்கும் நிதி நிறுவனங்களின் பாரிய சூறையாடல்கள் காரணமாக



எமது நாட்டில் 2.8 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 24 இலட்சத்து 38 ஆயிரம் பேர் பெண்களாகும். அதேபோன்று 200 பெண்கள் வரை நுண்கடன் திட்டத்தில் சிக்கிக் கொண்டு கடனை செலுத்த முடியாமல் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

மேலும் நுண்கடன் நிதி நிறுவனங்கள் மிகவும் மோசமான முறையில் பெண்களை இலக்கு வைத்து இந்தக் கடன் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன. இலாபத்தை விடவும் பாரிய சூறையாடலையே மேற்கொள்கின்றன.

அதனால் நுண்கடன் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகள், அவற்றின் சட்ட முறைகள் தொடர்பாக கணக்காய்வொன்றை மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக பாராளுமன்ற செயற்குழுவில் ஆராய்ந்து முறையான செயற்றிட்டங்களை ஏற்படுத்த வேண்டும்.

அதேபோன்று நுண்கடன் திட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு கடன் நிவாரணங்களை வழங்குவதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவிக்கப்பட்டபோதும் அந்த நிவாரணங்கள் இதுவரை அந்தப் பெண்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# சீனாவுக்கு முன்னுரிமை வழங்கி இந்தியாவை பகைத்து விட்டோம்

## எதிர்க்கட்சி சாடல்

(கொழும்பு)

அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு வரையறையற்ற முன்னுரிமை வழங்கியதால் அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் அழுத்தங்களை எதிர்க்கொள்ள நேரிட்டது.

சர்வதேச நாடுகளுடனான உறவுகளைக்கூட அரசாங்கம் தனது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விவகாரத்தை அரசாங்கம் குறுகிய அரசியல் தேவைக்காக பயன்படுத்திக் கொள்கிறது.

இராணுவத்தினரை மின்சார கதிரைக்கு கொண்டு செல்லும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் விவகாரம் காணப்படுகிறது என்று ஆளும் தரப்பினர் குறிப்பிட்டார்கள்.

இவர்களின் தவறான தேர்தல் பிரசாரங்களினால் இலங்கை சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்து காணப்பட்ட நெருக்கடி நிலைமைக்குப் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காணப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் இராணுவத்தினரை சர்வதேசத்தில் காட்டிக் கொடுத்ததாக குறிப்பிடப்படும் செய்தி முற்றிலும் தவறானதாகும். நாட்டின் இறையாண்மையையும் சுயாதீனத் தன்மையையும் அரசாங்கம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கவில்லை.

தற்போதைய அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினை அணுகும் விதம் முற்றிலும் தவறானது. வெறுக்கத்தக்க பேச்சுக்களினால் தேசிய நல்லிணக்கம் பாதிக்கப்பட்டுள்ளது.

உள்ளக மட்டத்தில் காணப்படும் தவறுகளை திருத்திக் கொள்ளாமல் சர்வதேச அரங்கில் வீரவசனம் பேசுவது பயனற்றது.

அரசாங்கம் இராஜதந்திர மட்டத்தில் பல நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2251

**வஸ்மிலா**

காலையில் சீக்கிரம் எழுந்து பேப்பர் போடும் பையனுக்கு



சீக்கிரம் எழுவதில் கஷ்டம் தெரியாது. அவனுக்கு தெரிந்தது எல்லாம் குடும்ப கஷ்டமே!

**சந்தியா**

பானை விலை 150 ருபாய்... நோ ப்ரிட்ஜ்... நோ கரன்ட்... நோ கெமிக்கல்...



ஜில்லுனு இந்த சம்மர்...

**லக்சன்**

ஊசிகள் நிறைந்த உலகில்...



அன்பு நிரம்பிய பலூன்கள்...!

**பிரபா**

உன்னுடைய முதல் வெற்றி எது தெரியுமா?



உன்னை நீயே ரசிப்பது
உன்னை நீயே மதிப்பது

**விந்துஜா**

என்னத்தான் கட்டி போட்டுடானுக. வேற வழியில்லாம கிடக்குறேன். இந்த அறிவுகெட்டவன் ஏன் இப்படி உட்கார்ந்திருக்கான். அதுவும் கயித்த பிடிச்சுகிட்டு.




**கலைவாணன்**



உறுதியான இலக்கு ஒன்றை மனதில் தீர்மானியுங்கள். அதை நோக்கிய பயணத்துக்கான வழியை உலகம் உங்களுக்கென உருவாக்கும்.
-நெப்போலியன் ஹில்-

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யானை உயிரிழப்பு



(கொழும்பு)

கலா வாவிற்கும் பல்லுவாவிற்கும் இடையிலான பள்ளத்தாக்கில் சுதந்திரமாக சுற்றித் திரிந்த 'ரேவதா' என்ற யானை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்த நிலையில் கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சேனைப் பயிர் செய்கையை பாதுகாப்பதற்காக முறையற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கிய பின்னர் அந்த யானை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

43 வயதான ரேவதா யானை மன்னார் மந்தையின் மிகப்பெரிய யானை ஆகும். இது கலா வாவிக்கருகில் சுற்றித் திரியும். (நி-4)

# குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 83 ஆயிரத்து 210 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் மேலும் 457 பேர் குணமடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதே வேளை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 86 ஆயிரத்து 343 ஆக காணப்படுகின்றது. அவர்களில் 2622 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் 511 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வாகன விபத்துக்கள் சடுதியாக அதிகரிப்பு 10 நாட்களில் 45 பேர் பரிதாபச் சாவு

(கொழும்பு)

கொரோனா நிலைமையால் இலங்கை முடங்கியிருந்தபோது வாகன விபத்துக்களும் குறைவடைந்திருந்தன. ஆனால், நாடு திறக்கப்பட்ட பின்னர் நாள் தோறும் வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த 10 நாட்களில் நாட்டின் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 45 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவின் தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

அதேவேளை, குறித்த நாட்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தவர்களில் இளைஞர்களே அதிகமாகவுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-4)

# வீதி விபத்துக்களை தடுக்க பொலிஸில் விசேட பிரிவு

(கொழும்பு)

வீதி விபத்துக்களை தடுப்பதற்காக பொலிஸில் விசேட பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அந்த பிரிவானது டிஜிட்டல் முறையின் கீழ் செயற்படுவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

வாகன விபத்துக்களால் நாட்டில் அதிகளவான உயிரிழப்புகள் ஏற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

வாகனங்களில் பயணிப்போர் மட்டுமல்லாது, பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதி செய்து வீதி விபத்துக்களை தடுப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவினால் இந்த யோசனை முன் வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், அதற்கான அனுமதி அமைச்சரவையினால் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், விரைவில் அந்தப்பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அமைச்சரவை இணைப்பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். (நி-4)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியின்றி பா.ஜ.க. ஆரம்பிக்க முடியாது

(கொழும்பு)

நாட்டில் நாம் அறிந்த வகையில் பாரதிய ஜனதா கட்சியை ஆரம்பிப்பதற்கான உத்தியோகபூர்வ செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்று அமைச்சரவை இணை பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் பேசிய அவர்,

இங்கு பாரதிய ஜனதா கட்சியின் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் அண்மையில் அந்நாட்டு அரசியல் வாதியொருவரால் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் இலங்கையிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான சட்டரீதியான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமே காணப்படுகிறது:

நாம் அறிந்த வகையில் இலங்கையில் அவ்வாறானதொரு கட்சியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

எனவே நாட்டு மக்கள் இது தொடர்பில் கலவரமடையத் தேவையில்லை. அவ்வாறான ஏற்பாடுகள் பாரதிய ஜனதா கட்சிக்கு இல்லை" என அவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அதிக ஆசை!

ஓர் ஊரில் ஒரு அம்மா இருந்தார். அவருக்கு ஒரு மகன். வயதான காலத்தில் அம்மாவைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வேலை தேடி பட்டணத்திற்குச் சென்றான் அந்தப் பையன். அங்கும் இங்கும் தேடினான். வேலை கிடைக்கவில்லை...இறுதியாக ஒரு நபர் அந்தப் பையனை வேலைக்குச் சேர்த்தார். முதலில் சில நாள் எந்த வேலையும் கொடுக்கவில்லை. அதன் பின்பு ஒரு நாள் இந்தப் பையனை அழைத்து ஓர் எருமை மாட்டுத் தோலை அவனிடம் கொடுத்தார். ஏன் எதற்கு என்று கேட்காமலே அவன் அதை வாங்கினான். அதன் பின் அவர் நான்கு கோணிப்பைகளை எடுத்துக்கொண்டு ஓர் ஒட்டகத்தையும் ஏற்பாடு செய்து கொண்டு புறப்படுவோம்" என்றார்.

அவனும் ஏன்,எதற்கு என்று கேட்கவில்லை. முதலாளி அழைக்கின்றார் சரி என்று புறப்பட்டான். இருவரும் சேர்ந்து அந்த ஒட்டகத்திலே ஏறினர். பயணம் ஆரம்பமாகி சென்றுகொண்டே இருந்தார்கள்.ஒரு பெரிய செங்குத்தான மலை வந்தது. ஒட்டகத்தை நிறுத்தினார். பையன் இறங்கினான். அவர் சொன்னார்: "இதோ பாரப்பா அந்த மாட்டுத் தோலை கீழே விரித்துப் போடு... அதிலே படுத்துக்கொள் "என்றார்.அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! இருப்பினும் முதலாளி சொல்கிறார். அவன் படுத்துக்கொண்டான். உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா? அந்த எருமைத்தோலை நான்கு பக்கமும் எடுத்து ஒன்றாக சேர்த்து ஒரு கயிற்றிலே கட்டினார். உள்ளே அந்த பையன்.

இவர் அவனை அப்படியே கட்டிப்போட்டுவிட்டு விலகிச் சென்றார். பின்பு ஒரு மரத்திற்குப் பின்னால் ஒழிந்துகொண்டார். இவர் அங்கே கட்டிப்போட்டது ஒரு எருமை மாடு மாதிரி தெரிந்தது. சொற்ப நேரத்தில் இரண்டு பெரிய கழுகுகள் அங்கே பறந்து வந்து அந்த எருமைத்தோல் மூடையை அப்படியே தூக்கிக் கொண்டு உயரப் பறந்து அந்த செங்குத்தான மலை உச்சிக்குச் சென்று அதை வைத்தன.அலகாலே கொத்திக் கட்டை அவிழ்த்தது... உள்ளே இருந்து ஒரு பையன் வெளியே வருவதைப் பார்த்ததும் அந்தக் கழுகுகள் பயந்து ஓடிச் சென்றன.

அந்தப் பையன் அங்கே பார்க்கிறான்... அவன் காலடியிலே ஏராளமான நவரத்தினங்கள் கொட்டிக் கிடந்தன. கீழே நின்றுகொண்டிருந்த முதலாளி கத்தினார்." ஏன் சும்மா நின்றுகொண்டிருக்கிறாய்.. உன் காலடியிலே இருக்கின்ற கற்களைப் பொறுக்கி கீழே போடு "என்றார். அவன் போட ஆரம்பித்தான்.. "முதலாளி நான் எப்படி கீழே இறங்கி வருவது? "எனக் கேட்டான்." நீ முதலில் போடு அதன் பின்பு அதற்கு வழி சொல்கிறேன் " என்றார். நான்கு பைகளும் நிரம்பியது. சேர்த்துக் கட்டி ஒட்டகத்தின் முதுகிலே ஏற்றிக் கொண்டு புறப்பட்டார்..முதலாளி என்று கத்தினான் அவன்.

"முட்டாளே என்னுடைய வேலையாட்களுக்கு எப்படி வேலை கொடுக்கிறேன் என்பது புரியவில்லையா? அங்கே மலை உச்சியிலே திரும்பிப் பார்... எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது புரியும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

பையன் திரும்பிப் பார்க்கிறான். அங்கே ஏராளமான எலும்புக் கூடுகள். "ஆகா ஏமாந்து போய்விட்டோம்" என்பதைப் புரிந்தான்.சொற்ப நேரத்திலே ஒரு கழுகு தலைக்கு மேலே பறந்து வந்தது.... அவன் மிகவும் சாமர்த்தியமாக ஒரே தாவாக தாவி அதன் காலைப் பிடித்துக் கொண் டான். கழுகு பயந்து மேலே பறந்தது... கடைசியில் களைத்துப்போய் ஓர் இடத்தில் இறங்கிவிட்டது... பையன் தொப் பென்று தரையிலே குதித்து தப்பித்து வந்து விட்டான். சிறிது காலம் கழித்து மீண்டும் பழைய முதலாளியிடமே வேலை கேட்டான். அவருக்கு ஆச்சரியம்... அவன் எப்படித் தப்பித்தான்? என்று!

இருந்தாலும் இவன் வேறு யாரோ அவன் சாயலில் இருக்கிறான் என்று நினைத்து வேலையில் சேர்த்தார். இரண்டு நாள் கழித்து வழக்கம் போல நான்கு சாக்கு மற்றும் எருமைத்தோல் என்பவற்றுடன் இவனையும் அழைத்துக் கொண்டு மலைப்பக்கமாகச் சென் றார். எருமைத்தோலைத் தரையிலே விரித்துப் படுக்கச் சொன்னார். உடனே இவன் புத்திசாலித்தனமாக...

"முதலாளி எனக்கு இதிலே எப்படி படுப்பது என்று தெரியவில்லை... நீங்கள் கொஞ்சம் படுத்துக் காட்டினால் தேவையில்லை " என்றான். அவரும் யதார்த்தமாக இதுகூட தெரியலையா உனக்கு என்று சொல்லிக்கொண்டே அதிலே படுத்தார். அவ்வளவுதான்... உடனே அவன் திடீரென அப்படியே சுருட்டி கயிற்றாலே கட்டினான். கொஞ்ச நேரத்திலே வழக்கம் போல இரண்டு கழுகுகள் வந்தன... தூக்கிக் கொண்டு சென்று அந்த நவரத்தின மலை உச்சியிலே போட்டுவிட்டது... மூட்டையை பிரித்தது. முதலாளி வெளியே வந்தார். கீழே இருந்து பையன் கத்தினான். "நேரத்தை வீணாக்காதீர்கள். ரத்தினக் கல்லையெல்லாம் பொறுக்கி கீழே போடுங்கள் " என்றான். அவருக்கு புரிந்துவிட்டது. அவன் பழைய ஆள் தான் என்று." அது சரி மலை உச்சியிலி ருந்து எப்படி கீழே இறங்கி வந்தாய் அதைச் சொல் முதலில் " என்றார்.

"முதலில் இரத்தினக் கல்லைப் பொறுக்கிக் கீழே போடுங்கள் அதன் பிறகு சொல்கிறேன் " என்றான். வேறு வழியில்லை பொறுக்கிப் போட்டார். நான்கு சாக்குகளிலும் கட்டிக்கொண்டு ஒட்டகத்திலே ஏறிப் புறப்பட்டான். முதலாளி கத்தினார். தப்பிக்க வழி என்ன.. அதைச் சொல்லாமலே போகிறாய் என்றார். தப்பிக்கிற வழி என்ன என்பதை உங்களுக்குப் பின்னால் இருக்கும் எலும்புக் கூடுகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டு போய்விட்டான் அவன். இது ஒரு துர்க்மேனிய நாட்டுக் கதையாம். நண்பர் ஒருத்தர் சொன்னார்.

அதிகமாக ஆசைப்பட்டால் ஆபத்து வரும் என்பதை உணர்த்துவதற்காக சொல்லப்பட்ட கதை இது. இது மாதிரி கதைகள் எல்லா நாடுகளிலும் உண்டு.

04

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018



**கலாநிதி க.தவலிங்கம்** ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

1. தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் போன்ற மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 4486 ஆக வைத்திருத்தல்.

2. தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்க மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8972 ஆக அதிகரித்தல்.

| அட்டவணை-1 | | | |
|---|---|---|---|
| பரிந்துரை | மொத்தஉறுப்பினர்கள் | வட்டாரஉறுப்பினர்கள் | 30% விகிதாசார உறுப்பினர்கள் |
| 1 | 4486 | 3450 | 1036 |
| 2 | 8972 | 6901 | 2071 |
| 3 | 5832 | 4486 | 1346 |
| 4 | 8800 | 6770 | 2030 |
| 5 | 6500 | 5000 | 1500 |

3. தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அளவுக்கு ஏற்ப 4486 வட்டார உறுப்பினர்களை நியமித்தல்..

4. 1981 ஆம் ஆண்டில் ஒழிக்கப்பட்ட கிராம சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கையான 8800 இற்கு ஏற்ப மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8800 ஆக வைத்திருத்தல்.

5. மொத்தமாக 5000 வட்டார உறுப்பினர்களை நியமித்தல் ஆகும்.

இப் பரிந்துரைகளின்படி மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவண்ண-1 இல் காட்டியதுபோல் அமைந்திருக்கும்.

பரிந்துரைகளில் கூறப்பட்ட இந்த எல்லா விடயங்களையும் கருத்தில் கொண்டு, 5000 உறுப்பினர்களை வட்டார மட்டத்தில் நிறுவுவதற்கான ஐந்தாவது பரிந்துரையானது தற்போதைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லாத காரணத்தால் குழு அதனை ஏற்றுக் கொண்டது.

இது அப்போதிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட (4486) கிட்டத்தட்ட 11 % அதிகரிப்பாகும். இதன் அடிப்படையில் மாவட்ட ரீதியாக ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்த உள்ளூராட்சி அதிகார சபைகளின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

தேசிய எல்லை வரையறைக் குழு தனக்கு கிடைக்கப்பெற்ற பரிந்துரைகளில் கூறப்பட்ட எல்லா விடயங்களையும் கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் 5000 வட்டார உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கேற்றவாறு உள்ளூராட்சி சபைகளின் வட்டாரங்களைப் பிரிப்பதற்கு உத்தேசித்தது.

இதனை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்குமான வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை முதலில் தீர்மானிக்கப்பட்டு அந்த எண்ணிக்கையின் மேலதிகமாக 30% விகிதாசார உறுப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆரம்பத்தில் உத்தேசிக்கப்பட்ட வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு. கொழும்பு (329), கம்பஹா (395), களுத்துறை (262), கண்டி (377), மாத்தளை (174), நுவரெலீயா (156), காலி (272), மாத்தறை (223), அம்பாந்தோட்டை (157), யாழ்ப்பாணம் (250), கிளிநொச்சி (42), மன்னார் (51), வவுனியா (58), முல்லைத்தீவு (42), மட்டக்களப்பு (143), அம்பாறை (224), திருகோணமலை (132), குருநாகல (379), புத்தளம் (179), அநுராதபுரம் (226), பொலநறுவை (101), பதுளை (240), மொனராகலை (116), இரத்தினபுரி (255), கேகாலை (217) மொத்தம் (5000).

இவ்வாறு பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்ட போதும் மாவட்டங்களுக்கு இடையே சனத்தொகை அதிகரிப்பு வீதம் 2012 இல் வேறுபட்டுக் காணப்பட்டது. சனத்தொகை அதிகரிப்பு வீதம் பின்வருமாறு இருந்தது.

கொழும்பு (11.38%), கம்பஹா (20.91%), களுத்துறை (8.08%), கண்டி (4.37%), மாத்தளை (2.16%), நுவரெலியா (4.80%), காலி (4.16%), மாத்தறை (2.01%), அம்பாந்தோட்டை (2.84%), யாழ்ப்பாணம் (-6.49%), கிளிநொச்சி (0.43%), மன்னார் (-0.59%), வவுனியா (1.61%), முல்லைத்தீவு (0.08 %), மட்டக்களப்பு (3.58%), அம்பாறை (5.04 %), திருகோணமலை (2.09%), குருநாகல (6.59%), புத்தளம் (5.08%), அநுராதபுரம் (4.76%), பொலநறுவை (2.68%), பதுளை (3.44%), மொனராகலை (3.11%), இரத்தினபுரி (5.07%), கேகாலை (2.82%).

| அட்டவணை-2எல்லைநிர்ணயக் குழுவால் பிரேரிக்கப்பட்டஉறுப்பினர்கள் எண்ணிக்கை | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் | A | B | C | மாவட்டம் | A | B | C |
| கொழும்பு | 329 | 99 | 428 | மன்னார் | 54 | 16 | 70 |
| கம்பஹா | 417 | 125 | 542 | மட்டக்களப்பு | 146 | 44 | 190 |
| களுத்துறை | 277 | 83 | 360 | அம்பாறை | 231 | 69 | 300 |
| கண்டி | 377 | 113 | 490 | திருகோணமலை | 136 | 41 | 177 |
| மாத்தளை | 168 | 50 | 218 | அனுராதபுரம் | 228 | 68 | 296 |
| நுவரெலியா | 186 | 56 | 242 | பொலன்னறுவை | 102 | 31 | 133 |
| காலி | 272 | 82 | 354 | குருநாகல் | 378 | 113 | 491 |
| மாத்தறை | 224 | 67 | 291 | புத்தளம் | 186 | 56 | 242 |
| அம்பாந்தோட்டை | 160 | 48 | 208 | பதுளை | 239 | 72 | 311 |
| யாழ்ப்பாணம் | 243 | 73 | 316 | மொனராகலை | 121 | 36 | 157 |
| கிளிநொச்சி | 40 | 12 | 52 | இரத்தினபுரி | 258 | 77 | 335 |
| வவுனியா | 63 | 19 | 82 | கேகாலை | 216 | 65 | 281 |
| முல்லைத்தீவு | 41 | 12 | 53 | மொத்தம் | 5092 | 1527 | 6619 |
| A-வட்டாரஉறுப்பினர்களளின் எண்ணிக்கை,B-விகிதாசார உறுப்பினர்களின் எண்ணிக்கை C- மொத்தஉறுப்பினர்களின் எண்ணிக்கை | | | | | | | |

சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை அடிப்படையாகக் கொண்டு சில மாவட்டங்களுக்கு வட்டார உறுப்பினர்களின் எண்ணிகையை அதிகரித்தும் சில மாவட்டங்களுக்கு வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சீர்செய்யப்பட்டது.

அதன் பிரகாரம் கொழும்பு, கண்டி, காலி ஆகிய மாவட்டங்களின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. கம்பஹா (22), களுத்துறை (15), நுவரெலியா (30), மாத்தறை (1), அம்பாந்தோட்டை (3), மன்னார் (3), வவுனியா (5), மட்டக்களப்பு (3), அம்பாறை (7), திருகோணமலை (4), புத்தளம் (7), அநுராதபுரம் (2), பொலநறுவை (1), மொனராகலை (5), இரத்தினபுரி (3) ஆகிய மாவட்டங்களின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை அடைப்புக்குள் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையால் (மொத்தம்-111) அதிகரிக்கப்பட்டது. மேலும் மாத்தளை (6), யாழ்ப்பாணம் (7), கிளிநொச்சி (2), முல்லைத்தீவு (1), குருநாகல் (1), பதுளை (1), கேகாலை (1) ஆகிய மாவட்டங்களின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை அடைப்புக்குள் கொடுக்கப்பட்ட எண்ணிக்கையால் (மொத்தம்-19) குறைக்கப்பட்டது.

இச் சீர்செய்கைக்குப் பின் மொத்த வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை 5092 ஆக அதிகரித்தது. இதன் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான விகிதாசார உறுப்பினர்களின் எண்ணிக்கையும் மாற்றப்பட்டது.

அதன்பின் எண்ணிக்கை பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டது. இதனை அட்டவணை-2 காட்டுகிறது. இங்கு A-வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை, B-விகிதாசார உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் C-மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகும்.

ஆரம்பத்தில் 5000 வட்டார உறுப்பினர்களை நியமிப்பதற்கு உத்தேசித்திருந்த போதும் சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை அடிப்படையாகக் கொண்டு சில மாவட்டங்களுக்கு உத்தேசித்த வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்தும் சில மாவட்டங்களுக்கு உத்தேசித்த வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்தும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சீர் செய்யப்பட்டது. இச் சீர்செய்கைக்குப் பின் மொத்த வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை 5092 ஆக அதிகரித்தது.

இதன் பிரகாரம் நாடுபூராக இருந்த 336 உள்ளூராட்சி அதிகார சபைகளும் (அட்டவணை-3) (குறிப்பு- தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சி அதிகார சபைகளின் எண்ணிக்கை 341 ஆக அதிகரித்தது) மொத்தம் 5092 வட்டார உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உறுப்பினர் வட்டாரங்கள், இரு உறுப்பினர்கள் வட்டாரங்கள், மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் எனப் பிரிக்கப்பட்டன.

நாடு பூராகவும் இருந்த 336 உள்ளூராட்சி அதிகார சபைகளும் (குறிப்பு- தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சி அதிகார சபைகளின் எண்ணிக்கை 341 ஆக அதிகரித்தது) மொத்தம் 5092 வட்டார உறுப்பினர்களைக் கொண்ட ஒரு உறுப்பினர் வட்டாரங்கள், இரு உறுப்பினர்கள் வட்டாரங்கள், மூன்று உறுப்பினர்கள் வட்டாரங்கள் எனப் பிரிக்கப்பட்டன.

(தொடரும்)

# 1000 ரூபாய் சம்பள விவகாரம் வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாயாக நிர்ணயித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தேயிலை மற்றும் இறப்பர் சார் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளத்தை 1000 ரூபாயாக நிர்ணயித்தே குறித்த வர்த்தமானி தொழில் அமைச்சரின் செயலாளரினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

குறித்த தீர்மானமானது, மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் செல்லுபடியாக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள நிர்ணய சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, குறைந்த பட்ச நாளாந்த சம்பளமாக 900 ரூபாயாகவும் வரவு - செலவுத் திட்ட சலுகை கொடுப்பனவாக 100 ரூபாயாகவும் சேர்த்து நாளாந்த சம்பளம் 1000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## வழிபாட்டுக்கு மெருகு சேர்க்கும் இசை, நாட்டியம்

(தொடர்ச்சி)

காலை 4.30 மணி அபிஷேகம் ஆரம்பிக்கும்போதும் அபிஷேகம் முடியும் போதும் நித்யதிபாராதனை காலங்களிலும் பெரியமணி அடிக்க வேண்டும். அதுபோல காலை 4.30 மணி முதல் எல்லா பூஜை கால ஆரம்பத்திலும் நகரா வாத்தியம் வாசிக்க வேண்டும் என்று நம் முன்னோர்கள் விதிமுறை வகுத்துள்ளனர்.

தமிழ்நாட்டுக் கோவில்கள் அனைத்திலும் காலை, நண்பகல், மாலை, இரவு ஆகிய நேரங்களில் இசை ஒலித்துக் கொண்டே இருந்த காலம் ஒன்று இருந்தது.

இப்போதும் சில கோவில்களில் தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவார்கள் பாடுகிறார்கள். நாதஸ்வரம் வாசிக்கப்படுகிறது. தவில் அடிக்கப்படுகிறது. இதர மேளங்களும் ஒலிக்கப்படுகின்றன.

ஒவ்வொரு காலத்திற்குரிய வாத்தியங்கள், ராகங்கள் இசைக்கப்பட்டன. பூர்வ சந்தியில் காந்தாரத்தையும் அதன் பின்னர் ஜாடவம் என்ற பண்ணையும் நண்பகல் வேளையில் நட்ட ராகத்தையும் அதன் பின்னர் கவுசிகத்தையும் மாலையில் இந்தளம் என்ற பண்ணையும் அர்த்த ஜாமத்தில் பஞ்சமம் என்ற பண்ணையும் பாட வேண்டும் என்று பழந்தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஸ்ரீரங்கத்தில் இப்போதும் காலை வேளையில் வீணை வாசிக்கப்படுகிறது. முன்பெல்லாம் எல்லாப் பெரிய கோவில்களிலும் வீணை வாசிக்கும் வழக்கம் இருந்து வந்தது.

இசையானது நமது உள்ளத்தில் என்னென்ன உணர்வுகளை ஊட்ட முடியும் என்பதை நமது முன்னோர்கள் ஆராய்ந்து தெரிந்து வைத்திருந்தனர்.

கோவில்கள் பொது இடம் என்பதாலும் இறை வழிபாட்டிற்காக மக்கள் வருவதாலும் இவ்விதம் இசையும் பாடல்களும் ஒலித்தால் அவற்றால் மக்கள் உடல் நலனும் மனநலனும் பெறுவார்கள் என்ற நல்ல எண்ணத்தாலும் அன்று நாடாண்ட தமிழ் மன்னர்கள் கோவில்களில் இசையை ஒலிக்கச் செய்தார்கள்.

கோவில்கள் அனைத்திலும் அந்தந்தக் காலத்துக்குரிய ராகங்களும் வாத்தியங்களும் வாசிக்கப்பட வேண்டும் என்ற நெறிமுறைகளை அன்றைய மன்னர்கள் பின்பற்றச் செய்தனர்.

இசை பாடுவோர், நாதஸ்வர கலைஞர்கள் போன்றோர் அந்தக் காலத்தில் சிறந்த முறையில் கௌரவிக்கப்பட்டனர்.

அரசர்கள் அவர்களுக்கு மாதச் சம்பளம் போக நிலபுலன்களையும் அளித்து அவர்களுடைய எண்ணமெல்லாம் இசையில் இருக்க வேண்டும் என்று வசதிகள் செய்து கொடுத்திருந்தனர்.

கோவில்களின் புனிதத்தைக் கட்டிக் காத்த அன்றைய மன்னர்கள் எப்போதும் இசை என்றும் நடனம் என்றும் கோவில் மண்டபங்களில் கலை நிகழ்ச்சிகள் நடத்தி மக்களின் மன அமைதியைப் போற்றி வந்தனர்.

அந்தக் காலத்தில் வாசிக்கப்பட்ட இசைக் கருவிகள் பல தமிழகத்தை விட்டுச் சென்று விட்டாலும் கேரளத்துக் கோவில்களில் பழைய மரபு கையாளப்படுகிறது. இசை பெரிதும் போற்றப்படுகிறது. தமிழ் நாட்டிலும் ஆலய விழாக்களுக்கு ஏற்ப இசையைப் பயன்படுத்தினால் இறைவனை நாம் மேலும் நெருங்க முடியும்.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் எங்கோ ஒரு கோவிலில் அத்திபூத்த போன்று ஒலிக்கும் இசையை நாம் கேட்டு மகிழ்வதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை என்ற பரிதாப நிலையில் இருக்கிறோம்.

ஆலயங்களில் இசை, நாட்டியத்தைப் பயன்படுத்துவது வெறும் பொழுது போக்குக்கு அல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இவை நம் ஆலய வழிபாட்டை நெறிப்படுத்தும் சக்திகளாகும். ஆகையால் ஆலய இசைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 10 ரயில் பெட்டிகள் நாட்டை வந்தடைந்தன

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து 10 அதிநவீன ரயில் பெட்டிகள் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இந்திய கடனுதவியில் RITES Ltd நிறுவனம் இலங்கை ரயில்வேக்கு வழங்கும் 160 ரயில் பெட்டிகளின் ஓர் அங்கமாக இவை நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. (நி-4)

## 68 கிலோ கிராம் ஹெரோயினுடன் இருவர் கைது

(மாத்தறை)

மாத்தறை, தியந்தர பகுதியில் 68 கிலோ கிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்கள் பயணித்த காரொன்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் தெற்கு பகுதி போதைப்பொருள் விநியோகத்திற்கான மையமாக மாறி வருவதை அவதானித்து வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (நி-4)

## 38 கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு, மாளிகாவத்தை பகுதியில் 38 கைத் துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டுக்காக சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 34 வயதுடையவர் ஆவார். அவரிடமிருந்து 2 கிராம் ஹெரோயினும் 18 கிராம் ஐஸ் மற்றும் 10 கிராம் கஞ்சா போதைப்பொருட்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 180 | 250 |
| தக்காளி | 160 | 150 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 45 | 60 | 40 |
| கோவா | 100 | 100 | 120 | 150 |
| கரட் | 140 | 200 | 200 | 200 |
| பூசணி | 60 | 80 | 80 | 100 |
| புடோல் | 120 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 130 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 90 | 80 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 160 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 200 | 140 | 150 | 200 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 120 | 80 |
| கறிமிளகாய் | 200 | 180 | 180 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 500 | --- | 800 |
| போஞ்சி | 140 | 120 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 60 | -- | 60 |
| கீரை – 1 பிடி | 40 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 150 | 130 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 230 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 140 | 120 |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | 120 | 100 | 60 | 100 |

# வேணாவில் கிராம மக்களுக்கு காணி, வீட்டுத்திட்டம் வழங்க நடவடிக்கை

(பனிக்கன்குளம்)

**வேணாவில் கிராம மக்களின் போராட்டத்துக்கு வெற்றி கிட்டியுள்ளதாகவும் 15 குடும்பங்களுக்கு காணியும் வீட்டுத் திட்டமும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**



தமக்கான காணி வீட்டுத் திட்டம் வழங்க நடவடிக்கை எடுத்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளதோடு தமது கிராமத்தில் இன்னும் 12 குடும்பங்கள் வரை காணிகள், வீடுகள் அற்று இருப்பதாகவும் அவர்களுக்கும் காணிகளையும் வீட்டுத்திட்டத்தையும் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேணாவில் கிராமத்தில் காணிகள் அற்ற மக்கள் தமக்கு வாழ்விட காணிகள் வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

தொடர்ச்சியாக இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் எந்தவிதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் குறித்த பகுதியில் காணிகளற்ற சுமார் 15 குடும்பங்கள் வீதியோரத்தில் கொட்டில்களை அமைத்து தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வாழ்வதற்கான வாழ்விடம் எதுவுமில்லை எனவும் காணிகள் வழங்கப்படும் வரை தாம் அந்த இடத்தை விட்டுச்செல்லமாட்டோம் எனவும் தெரிவித்து தொடர் போராட்டத்தை மேற்கொண்ட நிலையில் குறித்த இடத்திற்கு வருகை தந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் காணிகளை உடனடியாக வழங்க முடியாது எனவும் அதற்கான ஒரு காலஅவகாசம் தேவை எனவும் கோரிக்கைகள் நியாயமானது எனவும் ஐந்து மாதகால அவகாசத்திற் குள் உங்களுக்குரிய காணிகளை வழங்குவதாகவும் உறுதி அளித்தார்.

இந்நிலையில் குறித்த கோரிக்கைகளை முன்வைத்த 15 குடும்பங்களுக்கான காணிகள் மற்றும் அவர்களுக்கான வீட்டுத்திட்டங்களையும் வழங்குவதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில் குறித்த காணிகளை துப்புரவு செய்யும் பணியில் குறித்த குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.

குறித்த காணிகள் துப்புரவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கான காணிகளை அளவீடு செய்து வழங்கப்படவுள்ளதோடு அவர்களுக்கான வீட்டுத் திட்டங்களையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

தங்களைப் போல இன்னும் பத்துப் பன்னிரண்டு குடும்பங்கள் காணிகள் வீடுகள் அற்று இருக்கின்றன எனவும் அக்குடும்பங்களுக்கும் காணிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-281)

# புகையிரத ஆசன முற்பதிவு மீண்டும் ஆரம்பம்

(மன்னார்)

மன்னாரில் இருந்து கொழும்பிற்கு புகையிரதத்தில் பயணிக்கும் மக்கள் ஆசன முற்பதிவு இல்லாமையினால் தொடர்ச்சியாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அரச அதிகாரிகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் நேற்று புதன் கிழமை- அரசாங்க அதிபர் மன்னார் புகையிரத நிலையத்திற்கு சென்று உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

மன்னாரில் இருந்து கொழும்பிற்கான ஆசன முற்பதிவு இணையம் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.எனினும் குறித்த முற்பதிவு சேவைகளில் ஏற்பட்ட தடங்கள் காரணமாக மக்கள் மற்றும் அரச அதிகாரி கள் முற்பதிவு செய்ய முடியாத நிலையில் மன்னாரில் இருந்து கொழும்பிற்கு புகையிரத பயணத்தை மேற்கொண்டனர்.

குறித்த பிரச்சினை நீண்ட காலமாக காணப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அரச அதிகாரிகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தநிலையில் அரசாங்க அதிபர் மன்னார் புகையிரத நிலைய அதிகாரிகளுடன் கலந்துரையாடி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இந்த நிலையில் ஏற்பட்டுள்ள இடர் களை நிவர்த்தி செய்து உடனடியாக முற்பதிவு நடவடிக்கைகளை துரித ப்படுத்தி நடமுறைப்படுத் துவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (5-4-285)

# இரத்ததானம்

(குப்பிழான்)

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாம் இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மேற்படி சங்க சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் குருதிக் கொடை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (5-4-18)

# மகா சிவராத்திரி உற்சவம்

(குப்பிழான்)

சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மகா சிவராத்திரி உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது. இவ் வாலயத்தில் மகா சிவராத் திரியை முன்னிட்டு முதல் ஜாமப் பூசை இன்று வியாழக்கி ழமை மாலை 6 மணியளவி லும், இரண்டாம் ஜாமப் பூசை இரவு 10 மணியளவிலும், மூன்றாம் ஜாமப் பூசை லிங்கோற்பவ உற்சவ மாக இரவு ஒரு மணியளவிலும், 4 ஆம் ஜாமப் பூசை நாளை வெள்ளிக் கிழமை அதிகாலை 4 மணியளவிலும் நடைபெறும்.

நான்கு ஜாமப் பூசைகளும் நிறை வடைந்த பின்னர் சுவர்ணாம்பிகா சமேத பொன்னம்பலவாண சுவாமி உள்வீதிவலம் வருதலும்இடம்பெறும். (5-4-18)

# யாழ்.பல்கலையில் தொற்று நீக்கும் பணி ஆரம்பம் பலர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் மாணவ ஒழுக்காற்று அதிகாரி ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொற்று அடையாளப்படுத்தப்பட்டதை அடுத்து, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வழிகாட்டல்களுக்கு அமைய, பல்கலைக் கழக கொவிட் தொற்று பரவல் தடுப்புச் செயலணி தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான மேலதிக முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

மாணவ ஒழுக்காற்று அதிகாரி கடமை நிமித்தம் பல் கலைக்கழகத்தினுள் நடமாடிய அனைத்து இடங்களிலும் நேற்று தொற்று நீக்கம் செய்யப்பட்டதுடன் மாணவ ஒழுக்காற்று அதிகாரி அலுவலகத்தில் பணிபுரியும் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. அதேநேரம், கடந்த 8ஆம்திகதி இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் குறித்த அதிகாரியும் கலந்து கொண்டமையால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் பலர் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் . எனினும், அவர்கள் அனைவரும் பி. சி. ஆர் .பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-4-33)

# மன்னார் மாவட்டத்தில் இதுவரை 305 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 11 ஆயிரத்து 230 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளா நிலையில் 305 கொரோனா தொற்றாளர்கள் தற்போது வரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் மருத்துவர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் 17 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர் களில் 8 பேர் மன் னார் மீன் சந்தை பகுதியில் மீன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 305 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத் தில்288 நபர்கள் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த மாதத்தில் 38 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 11 ஆயிரத்து 230 பி.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த மாதம் 683 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.மன்னார் மாவட்டத்தில் க.பொ.த சாதாரண தர பரீட்சைகள் சுமுகமான முறையில் இடம் பெற்றுள்ளது.

முதல் நிலை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்த மூன்று மாணவர்கள் சுகாதார பிரிவின் போக்குவரத்து வசதி ஊடாக குறித்த பரீட்சையில் தோற்றி நேற்று பரீட்சையை நிறைவு செய்துள்ளனர்.

இன்று இடம் பெறும் திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி நிகழ்வு மட்டுப்படுத்தப்பட்ட அளவு பக்தர்களுடன் கடுமையான சுகாதார நடை முறைகளுடன் இடம்பெறும்.

கண்காணிப்பு நடவடிக்கைகளில் சுகாதார பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5-285)

அண்ட சராசரம் அவன்திரு மேனி அண்ட சராசரம் அவன்திரு ஆடல் அண்ட சராசரம் அவனே யாகும் அண்ட சராசரம் முழுதும் அதிசயம் – நற்சிந்தனை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மகிமை நிறைந்த சிவராத்திரியை புனிதமாக அனுஷ்டிப்போம்!

இன்று சிவராத்திரி விரதம். சிவனுக்குரிய விரதங்களில் முதன்மையானது சிவராத்திரி விரதம் என வேதங்கள் எடுத்துரைக்கின் றன.

வெவ்வேறு சமயங்கள் வெவ்வேறு கடவுளர்களைக் குறித்து நின்றாலும் சிவப்பரம் பொருள் ஆதியும் அந்தமுமில்லாத ஜோதி.

அதனால்தான் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று சான்றாண்மைமிக்க பெரியவர்கள் முடிவு செய்தனர்.

ஆக, சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவன் ஜோதி வடிவானவன்.

தனிப்பெரும் கருணையாக இருக்கக் கூடிய அருட்பெரும் ஜோதியை வழிபடுகின்ற நாள் இன்றைய சிவராத்திரி விரதமாகும்.

பசித்திருந்து விழித்திருந்து சிவனை வழிபட்டு முத்திப் பேரின்பத்தை அடைவதற்கான விரதம் என்பதால், சிவராத்திரி விரதம் மகிமையும் புனிதமும் நிறைந்தது.

இந்த பிரபஞ்சத்தின் இயங்குநிலைக்கு மூலகர்த்தாவாக இருக்கும் சிவப்பரம் பொருள் நடராஜவடிவம் தாங்கி ஆடல் புரிகின்றான்.

அவனின் ஆடல் ஈரேழு பதினான்கு லோகங்களையும் இயங்க வைக்கிறது.

பஞ்ச பூதங்களைத் தன்னுள் அடக்கிய கூத்தபிரானின் தூக்கிய திருவடி நம் துன்பங்களையெல்லாம் போக்கவல்லது.

எனினும் சமகாலத்தில் சிவராத்திரி விரதம் என்பது திரைப்படம் பார்ப்பதற்கும் வீதிகளில் நின்று காலத்தை அவமே கழிப்பதற் கும் களியாட்டம் செய்வதற்கும் உரிய நாள் என்பது போல நிலைமை மாறிவிட்டது.

இதுபற்றிய விழிப்புணர்வுகளை யார் செய்தாலும் அது பயன்தராது என்று கூறுமளவுக்கு நிலைமை மோசமாயிற்று.

உண்மையில் சிவராத்திரி விரதமானது மானிடர்கள் தம் வஞ்சப்புலன்களை அடக்கி, உள்ளொளி பெருக்கி, பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணனை தம்முள் ஏத்துவதாகும்.

ஆனால் சிவராத்திரி விரதத்தின்போது சிலர் அறியாமை இருளில் மூழ்கிச் செய் கின்ற விசமத்தனங்கள் அவர்களின் எதிர்காலத்தை அஸ்தமனமாக்குகிறது.

ஆகையால் இன்றைய சிவராத்திரி விரதத்தை நாம் அனைவரும் பயபக்தியோடு அனுஷ்டிப்போமாக.

இதன் ஊடாக எங்கள் முன்னை வினைக்கு முடிவு கட்டுவோம். மனித சமூகத்தால் எங் கள் இனத்துக்கு தரமுடியாததை ஜோதி வடிவாகிய நடராஜப் பெருமானிடம் வேண்டுவோம். அவன் நிச்சயம் எங்களைக் காத்தருள்வான். இது சத்தியம்.

### வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம்

# யாழில் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும் காணிப் பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படும்

### பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும் காணிப் பிரச்சனைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் நெடுந்தீவு. சுண்டிக்குளம், நாவற்காடு மற்றும் சரசாலை பகுதிகளில் குறித்த திணைக்களங்களால் தனியார் மற்றும் அரச காணிகள் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதால் மக்களின் இயல்பு வாழ்விற்கு பாதிப்பு ஏற்படுவதாக அண்மையில் யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின்போது சுட்டிக்காட்டப்பட்டது. அதனடிப்படையில் இவ்விடயம் தொடர்பாக துறைசார் அமைச்சர் சி.பி. ரத்னாயக்கவின் கவனத்திற்கு மாவட்ட அபிவிருத்தி ஒழுங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் அங்கஜன் கொண்டு சென்றதுடன யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் காணி பிரச்சினை உள்ள பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலர்களுடன் கொழும்பில் அமைச்சரின் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் அமைச்சில் இருந்து உத்தியோகத்தர்கள் யாழ் வருகை தந்து பிரதேச செயலர்களுடன் இணைந்து கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட பின்னர் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

## சிகையலங்கரிப்பு நிலையத்திற்கு சீல் வைக்கப்பட்டது

(கரணவாய்)

பருத்தித்துறை புலோலி மேற்குப் பகுதியில் கொரானாக் கட்டுப்பாட்டு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாது இயங்கிய சிகையலங்கரிப்பு நிலையமொன்று அப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையிலான குழுவினரால் நேற்று சீல் வைக்கப்பட்டது.

சிறைச்சாலையிலிருந்து பிணையில் விடுவிக்கப்பட்டு சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் சுயதனிமைக் காலம் முடிய முன்னரே சட்டவிரோதமாக வெளியேறி குறித்த நிலையத்தில் சிகையலங்கரிப்பு செய்துள்ளார்.

இவ்விடயம் அவரை விசாரித்த போது தெரிய வந்தது.

அந்நிலையத்தில் சேவை பெறுநருக்கான பதிவுகளெதுவும் கிரமமாகப்பேணப்படாததோடு குறித்த நபர் சேவை பெற்றமைக்கான பதிவுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

தொடர்ந்து நடைபெற்ற விசாரணைகளில் தனிமைப்படுத்தப்பட்ட நபர் அங்கு சேவை பெற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

இதனால் கொரோனாக் கட்டுப்பாட்டுக்கு விரோதமாக செயற்பட்டமைக்காகவும் தொடர் விசாரணைகளுக்காகவும் பொதுச்சுகாதார பரிசோதகரால் சீல் வைக்கப்பட்டது. (5-4-60)

## 27 ஆம் திகதி முதல் வினாத்தாள் திருத்தும் பணி

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-4)

## ஹிருணிகா பிணையில் விடுதலை

(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்ததையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இளைஞர் ஒருவரை கடத்த முயற்சித்த வழக்கின் விசாரணைக்கு நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தினால் அவரை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை உத்தரவை பிறப்பித்தது.

நீதிமன்ற வளாகத்தில் தனது ஒன்றரை மாத குழந்தைக்கு உணவளித்துவிட்டு வருவதற்கு தாமதமானதால் சரியான நேரத்தில் ஆஜராகத் தவறிவிட்டார் என சட்டத்தரணி தெரிவித்தார்.

அத்தோடு உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியமைக்காக ஹிருணிகா பிரேமச்சந்திர நீதிமன்றிடம் மன்னிப்பும் கோரி யிருந்தார். இதனையடுத்து பிணை நிபந்தனையின் அடிப்படையில் ஹிருணிகா பிரேமச்சந்திர விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சத்திய தரிசனம்

## நல்லதையே தேர்ந்தெடுங்கள்



- பெற்றோருக்கு மதிப்பளியுங்கள். அப்போது தான் எதிர்காலத்தில் நீங்கள் தேடிய செல்வத்தால் வாழ்வு வளம் பெறும். சேர்த்து வைத்த புண்ணியம் வாழ்விற்கு பாதுகாப்பு தரும்.
- உலகில் நன்மையும், தீமையும் கலந்தே இருக்கிறது. நீங்கள் நல்லதை மட்டுமே தேர்ந்தெடுங்கள்.
- தனிமனிதனின் ஒழுக்கம் சமுதாய ஒழுக்கத்திற்கு அடிப்படை. அதனால், ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்துடன் வாழ கடமைப்பட்டிருக்கிறான்.
- ஏட்டுப்படிப்பை பெறுவது கல்வியாகாது. ஆன்மிக வாழ்வில் ஈடுபட்டு ஞானத்தை அடைவதே உயர்ந்த கல்வி.
- அன்பு, நல்லொழுக்கம், உயிர்களிடம் கருணை ஆகிய குணங்களைக் கொண்ட மனிதன் சொர்க்கத்தில் வாழும் பேறு பெறுகிறான்.
- கல்லிலே கடவுளைக் காண முயற்சிக்க வேண்டுமே ஒழிய, கடவுளைக் கல்லாக்க முயற்சிக்கக் கூடாது.
- சரியான டிக்கெட்டும், ரயிலும் கிடைத்து விட்டால் ஊர் போய்ச் சேரலாம். தெளிந்த அறிவும், சாஸ்திர ஞானமும் இருந்து விட்டால் லட்சியத்தை அடையலாம்.

# மகா சிவராத்திரி இன்று



மகா சிவராத்திரி மகிமை நிறைந்தது. அன்னை அம்பிகைக்கு நவராத்திரி ஒன்பது நாள் கொண்டாட்டம். அப்பன் சிவபெருமானுக்கு ஒரே ராத்திரி அது சிவராத்திரி. கருடபுராணம், அக்னி புராணம்,கந்தபுராணம்,பத்மபுராணம், அருணாச்சலபுராணம், சிவராத்திரி புராணம் உள்ளிட்ட பல நூல்கள் சிவராத்திரியின் மகிமை பற்றி பலவாறாகக் கூறுகின்றன. சிவராத்திரி நாளில் சிவ ஆலயம் சென்றால் ஓராண்டு முழுக்க சிவபூஜை செய்த புண்ணியம் உங்களை வந்து சேரும். மாதந்தோறும் சிவராத்திரி உண்டு என்றாலும் மாசி மாதத்தில் வருவதே மகா சிவராத்திரி என்று போற்றப்படுகிறது.

சிவாய நம என சிந்திப்போருக்கு அபாயம் ஒருபோதும் இல்லை என்பது ஆன்றோர் வாக்கு. சிவராத்திரியன்று தம்பதிகளாக கணவன் - மனைவி ஆகிய இருவரும் சிவலிங்க வழிபாடு செய்தால் இல்லறம் இன்பமாக திகழும். தம்பதிகள் அந்நியோன்னிய அன்பு நிறைந்து இறைவனின் திருவருளால் வளமுடன் வாழ்வார்கள். சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து மகாவிஷ்ணு, மகாலட்சுமியையும் சக்கர ஆயுதத்தையும் பெற்றார். பிரம்மா சரஸ்வதியை பெறும் பாக்கியம் அடைந்தார். நந்தியம் பெருமான் சிவராத்திரி மகிமை எடுத்துக் கூறியதை அடுத்து முருகன், சூரியன், சந்திரன், மன்மதன், இந்திரன், அக்னி, குபேரன் ஆகியோர் நல்வரங்களைப் பெற்றார்கள் என புராணங்கள் சொல்கின்றன.

சிவராத்திரி நாளில் பல முக்கிய சம்பவங்கள் திகழ்ந்துள்ளதாக புராணங்கள் கூறுகின்றன. பாற்கடலை தேவர்களும்,அசுரர்களும் இணைந்து கடைந்த போது பொங்கி வந்த ஆலகால விஷம் மண்ணுலக மக்களை பாதிக்க கூடாது என்று எண்ணிய சிவபெருமான் ஆலகால விஷத்தினை தனது கண்டத்தினுள் தாங்கி நீலகண்டனாக மாறி உலகத்தை அழிவில் இருந்து காத்தது இந்த சிவராத்திரி நாளில் தான். அன்னை உமாதேவி ஈசனின் கண்ணை மூடியதால் விளைந்த குழப்பத்தை நீக்கிக் கொள்ள விரதமிருந்து பேறு பெற்றதும் இந்நாளில் தான்.

சிவனின் இடப்பாகத்தினை அன்னை பார்வதி பெற்ற தினம் இந்த நாள் தான். சிவனாரின் திருவடி மற்றும் திருமுடி காண புறப்பட்ட திருமாலுக் கும் பிரம்ம தேவருக்கும் பாடம் கற்பிக்க நினைத்த சிவபெருமான் லிங்கோற்பவராக பெரும் ஒளிப்பிழம்பாகத் தோன்றி காட்சி அளித்ததும் மகா சிவராத்திரி திருநாளில் தான். அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெற்றதும்,கண்ணப்பர் தனது கண்ணை அளித்து ஈசனிடம் மோட்சம் பெற்றதும் இந்நாளில் தான்.

பிரம்மா தனது படைப்புத் தொழிலை தொடங்கிய இந்நாளில் தான் இந்திரன் தேவலோக அதிபதியாக மாறியதும் இந்த நாளில் தான். குபேரன் செல்வத்தின் அதிபதியான நாளும் இந்த நாள் தான். கண்ணப்ப நாயனார் சிவபெருமானுக்காக தனது கண்களை தானமாக அளித்ததும் இந்த நாள்தான். சிவபெருமான் தனது பக்தன் மார்க்கண்டேனுக்காக எமனை காலால் உதைத்த தினம் சிவராத்திரி. இன்றைய தினத்தில் விரதம் இருந்து சிவஆலயம் சென்றால் ஓராண்டு முழுக்க சிவபூஜை செய்த புண்ணியம் உங்களை வந்து சேரும்.

சிவராத்திரி நாளில் விடிய விடிய நான்கு ஜாமங்களிலும் நான்கு கால பூஜை நடத்த வேண்டும். வாசனை மலர் அலங்காரத்தை விடவும் வில்வ அர்ச்சனையே பூஜைக்கு ஏற்றது. இந்த விரதத்தின் பெருமையை வேறு எந்த வொரு விரதத்தோடும் ஒப்பிட முடியாது. கோயிலுக்கு சென்று நான்கு ஜாமப்பூஜைகளிலும் பங்கேற்க முடியாதவர்கள் இரவு வீட்டிலேயே நான்கு ஜாமங்களிலும் நான்குகால பூஜையை முறைப்படி செய்யலாம்.

வீட்டில் பூஜை செய்பவர்கள் பஞ்சாட்சர மந்திரமான நமசிவாய, சிவாயநம வார்த்தைகளை உச்சரித்த படி இருக்க வேண்டும்.

நான்கு கால பூஜைக்கு முன்பாக நடராஜரையும் பிரதோஷ நாயகரான நந்தியம் பெருமானையும் வழிபட வேண்டும். முதல் ஜாமத்தில் சோமாஸ்கந்தரையும் இரண்டாம் ஜாமத்தில் தென்முகக் கடவுளான தட்சணாமூர்த்தியையும், மூன்றாம் ஜாமத்தில் லிங்கோற்பவரையும்,நான்காம் ஜாமத்தில் ரிஷபாரூடமூர்த்தி (சந்திரசேகரர்) யையும் வழிபட வேண்டும்.

கண் விழித்திருக்கும் பக்தர்கள் சிவபுராணம், திருவிளையாடல் கதைகள், அறுபத்து மூவர் வரலாறு முதலான சிவ மகத்துவங்களை விபரிக்கும் ஞானநூல்களை படிப்பது புண்ணியம் தரும். மறுநாள் அதிகாலை குளித்து விட்டு இறைவனுக்கு நெய்வேத்தியம் படைத்து வணங்க வேண்டும். ஏழை எளியவர்களுக்கு தானம் செய்து விட்டு சாப்பிட வேண்டும்.

## 40 வயதை தாண்டினால் கண் பரிசோதனை அவசியம்




(கொழும்பு)

40 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் அரச வைத்தியசாலையில் அல்லது கண் மருத்துவர் ஒருவரை சந்தித்து குளுக்கோமா நோய் தொடர்பாக பரிசோதனை செய்வதன் முக்கியத்துவத்தைக் கண் மருத்துவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மார்ச் 7 ஆம் திகதி ஆரம்பமான குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு வைத்தியர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர். இந்த குளுக்கோமா வாரம் நாளை மறுதினம் 13 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடக செயலமர்வில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தொற்று நோய் வைத்தியர் சம்பிகா விக்ரமசிங்க இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கண் பார்வை பாதிப்பு தொடர்பில் 3 விடயங்களில் குளுக்கோமா நோய் 3 ஆம் இடம் பெறுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த நோயின் ஆரம்ப கட்டங்களில் எந்த அறிகுறிகளையும் காட்டாதது இதன் விசேட அம்சமாகும்.

நோயை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் கண் பார்வை பாதிப்பை தவிர்க்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

குடும்பத்தில் யாரேனும் ஒருவர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் மற்ற குடும்ப உறுப்பினர்களின் கண்களை பரிசோதிப்பது மிகவும் முக்கியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

## பொதுபல சேனாவை தடை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து சத்தியாக்கிரக போராட்டம்



(கொழும்பு)

சிங்கள பௌத்தர்கள் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு மகாநாயக்க தேரர்களுக்கு உண்டு.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைக்கும், பொதுபல சேனா அமைப்பினை தடை செய்ய வேண்டும் என்ற பரிந்துரைக்கும் எதிர்ப்பு தெரிவித்து இன்று வியாழக்கிழமை சுதந்திர சதுக்கத்தில் பௌத்த துறவிகளை ஒன்றிணைத்து சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். இதற்கு மகா நாயக்க தேரர்கள் ஆதரவு வழங்க வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் அஸ்கிரிய பீடத்திடம் கோரிக்கை விடுத்தார். (நி-4)

## உலங்குவானூர்தி தொடர்பில் பாராளுமன்றில் கடும் விவாதம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விமானப்படையால் வழங்கப்பட்ட ஹெலிகொப்டர்கள் தொடர்பாக நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் விவாதம் இடம் பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோர், ஜனாதிபதிக்கு வழங்கிய சேவைகள் குறித்து கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மேலும் குறித்த கால கட்டத்தில் சில சுற்றுப் பயணங்களில் ஜனாதிபதிக்கு இரண்டு ஹெலிகொப்டர்கள் ஏன் வழங்கப்பட்டன என்றும் அதேவேளை தேர்தலின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரச சொத்து பயன்பாட்டைக் குறைப்பதாக உறுதியளித்ததாகவும், ஜனாதிபதி இதுவரை தனது பதவிக் காலத்தில் இது போன்ற மாற்றங்களைச் செய்திருக்கிறாரா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

குறித்த கேள்விகளுக்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ, பாதுகாப்பு காரணங்களுக்காக ஜனாதிபதிக்கு இரண்டு ஹெலிகொப்டர்கள் வழங்கப்பட்டுள்ளன என தெரிவித்தார். (நி-4)

## விபரீத முடிவெடு...

உடல் சுகவீனமுற்ற நிலையில் கை பிடித்து எழும்புவதற்கு ஒரு கயிறு கட்டப்பட்டு இருந்தது. அவர் அந்தக் கயிற்றிலேயே தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

இதில் கோவிந்தன் செல்வராசா (வயது-75) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,104)

## கிளிநொச்சி...

புதுக்குடியிருப்பிலிருந்து பரந்தன் நோக்கி ஒரே திசையில் பயணித்துக் கொண்டிருந்த ஜே.சி.பி வாகனத்துடன், மோட்டார் சைக்கிள் மோதிக் கொண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஜே.சி.பி வாகனத்துடன் மோதியதில் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

ஜே.சி.பி வாகனத்தை முந்தி செல்ல முற்பட்டபோதே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாக சம்பவத்தை அவதானித்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் விசுவமடு பகுதியை சேர்ந்த 20 வயதுடைய குணராஜா ஜெனோஜன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(ம-3,100,316)

## 141 கிலோ...

காலை 141 கிலோ கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பொதிகள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது மன்னாரைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-3,101,104)

## சிவராத்திரி வழி...

கள், இந்து மதத் தலைவர்கள், கோவில் அறங்காவலர் சபையினர், பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த வாரத்திலிருந்து யாழ்ப் பாணம் மாவட்டத்தில் கோவிட் - 19 பரவல் தீவிரமடைந்து வருகின்றது. அதனால் பக்தர்கள் மற்றும் பொதுமக்களை அவதானமாக நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (ம-3,18,33)

## அம்பாள்குளத்...

கூற்று பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அம்பாள்குளத்திலிருந்து பெண்ணொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதில் உருத்திரபுரத்தை சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான ஆறுமுகம் திலகேஸ்வரி (வயது-37) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பெண்ணின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதன் முடிவின் அடிப்படையில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும், பெண் கர்ப்பம் தரித்துள்ளதாகவும் மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம-3,100,315)

## வாக்குமூலம்...

புக்களின் இணைத் தலைவரும் யாழ்ப் பாணம் சிவகுரு ஆதீன பீடத்தின் முதல்வருமான தவத்திரு.வேலன் சுவாமிகளிடம் வாக்குமூலம் பெறுவதற்காக கிளிநொச்சிப் பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்திற்குச் சென்றிருந்தனர்.

எனினும், நீங்கள் முன்னறிவித்தலின்றி வந்தமையால் எனக்கு நேரம் ஒதுக்கி வாக்குமூலம் வழங்குவது கடினமாக உள்ளது.

எனவே, நேரத்தைக் குறித்து அறிவித்து விட்டு வந்தால் சட்டத்தரணிகளுடன் ஆலோசித்துவிட்டு வாக்குமூலம் வழங்குவதாகவும் தவத்திரு வேலன் சுவாமிகள் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து பொலிஸார் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். (ம-3,18,33)

## யாழில் ஆரம்ப...

பரிசில் பரீட்சைக்கு தோற்றும் அவர், கடந்த திங்கள் வரை பாடசாலைக்கு சென்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஒழுக்காற்று அதிகாரி ஒருவர் நேற்று முன் தினம் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அவரது குடும்பத்தினரிடம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில், மனைவி மற்றும் மகள் தொற்றிற்குள்ளானது நேற்று தெரியவந்தது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் அந்த மாணவி, கடந்த 8ஆம் திகதி வரை பாடசாலையில் நடந்த வகுப்பிற்கு சென்றிருந்தார். அந்த வகுப்பில் 40 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள்.

இதையடுத்து, அந்த வகுப்பு மாணவர்கள், ஆசிரியருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-3,18,33)

## யாழை அச்சுறு...

ஏற்பட்டுள்ளது.

**தெல்லிப்பழையில் மூவர்**

அவர்களில் 3 பேர் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரும் நேற்று முன்தினம் சுன்னாகத்தில் கண்டறியப்பட்ட இலங்கை வங்கி ஊழியர் ஒருவருடன் நேரடித் தொடர்புடையவர்கள்.

**கோண்டாவில் இ.போ.ச. சாலையில் இருவர்**

மேலும் இருவர் இ.போ.சவின் யாழ்ப் பாணம் - கோண்டாவில் சாலையில் கண்டறியப்பட்டுள்ளனர். அங்கு 30 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டன. அவர்களில் ஒருவர் சாரதி பயிற்றுவிப்பாளர். மற்றையவர் சாலை அலுவலகத்தில் பணியாற்றுபவர்.

**நல்லூரில் மூவர்**

மேலும் மூவர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஒழுக்காற்று அதிகாரி. நேற்று முன்தினம் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவரது குடும்ப உறுப்பினர்கள். மற்றையவர் யாழ்ப் பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பணியாற்றுபவர்.

**யாழ்.நகரில் இருவர்**

யாழ்ப்பாணம் நகரில் கே.கே.எஸ் வீதியில் கருவாட்டுக் கடை நடத்தும் ஒரு வருக்கும் கொரோனா தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

**யாழ்.சிறையில் ஐவர்**

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மேலும் 5 கைதிகளுக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**காரைநகர் இ.போ.ச. சாலையில் இருவர்**

இ.போ.சவின் காரைநகர் சாலையில் மேலும் 2 நடத்துநர்களுக்கு தொற்றுஉள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப் பாணம் மாநகர எல்லையில் உள்ள இராணுவ முகாம் சிப்பாய் ஒரு வருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

**காவலூரில் மூவர்**

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனையில் சுய தனிமைப் படுத்தப்பட்டிருந்த மூவருக்கு தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்திய சாலையில் 4 பேருக்கு தொற்று உள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் 3 பேர் வெளிநாடு செல்வதற்காக பிசிஆர் பரி சோதனை மேற்கொண்டவர்கள். ஒருவர் வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்டபோது மாதிரிகள் பெறப்பட்டவர்.

செட்டிக்குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முறிகண்டியைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப் பட்டுள்ளது ." என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## ஈஸ்டர்...

டுள்ளோம், அதனையே இரண்டு ஆண்டுகளில் கிறிஸ்தவ சமூகம் இன்று கேட்கும் நிலைமை உருவாகியுள்ளது.

எனவே உள்ளக விசாரணை பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பதை இன்று நிரூபணமாகிவிட்டது எனவும் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதில் இராச்சியம் தோற்றுவிட்டது எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சபையில் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் ஆளும் கட்சி கொண்டுவந்த பிரேரணை சபை ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றியபோதே ஆளும் கட்சியினர் இதனைக் கூறினார். (ம-3)

## 4 பேர்...

றுக்கு உள்ளாகி மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2021/03/10
சீட்டிழுப்பு இலக்கம் 4422
B 7 9 3 8 6 8

மெகா பவர்
திகதி 10/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0786
G 10 05 41 55 74

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 10.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2717
S 29 63 73 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1103
தனுசு 0 6 5 8 4 8

தன நிதானய
திகதி - 10/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 459
T 04 15 24 64
0 2 4 9

சீட்டிழுப்பு வாரம் 059
சீட்டிழுப்பு திகதி 10.03.2021
வெற்றி இலக்கங்கள் 03 18 37
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 23,94,540/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1218
சீட்டிழுப்பு திகதி: 10.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 116,175,005
வெற்றி இலக்கங்கள் 38 54 55 65 F

சனிதா
சீட்டிழுப்பு இல: 3548
சீட்டிழுப்பு திகதி: 10.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,819,601
வெற்றி இலக்கங்கள் 24 47 50 56 H

சுப்பர் ஜக்பொட் 2,224,827/=
வெற்றி இலக்கங்கள் 08 28 32 54 சிம்மம்
திகதி: 10.03.2021
வெற்றி வாரம்: 3099
வர்ணம்: பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,254,380

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1392 நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 10/03/2021 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் C 01 17 19 43
அடுத்த சுப்பர் ஜக்பொட் 73,431,238/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1740
சீட்டிழுப்பு திகதி 10.03.2021
வெற்றி இலக்கங்கள் 18 19 33 56 K
ரூ. 22,836,024
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# 2023 A/L ZOOM CHEMISTRY

(O/L எழுதுபவர்களுக்குரியது)

**க.சிவத்திரன் B.Sc (Hons)**

ஆரம்பம் 15.03.2021 Mon 6.00pm - 7.30 pm
Mon, Tue, Thur, Fri 6.00pm - 7.30pm

இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் இணையலாம். இறுதிப்பரீட்சை வரை இதே நேர அட்டவணைப்படியே ZOOM இல் தொடரும்.

**Normal Call : 077 008 6416**

2021 & 2nd Shy அலகுரீதியான கடந்தகால வினா விடை வகுப்பு Daily 5.30am - 7.00 am (ZOOM)
Inorganic நடைபெறுகிறது.

2021 & 2nd Shy Theory அயன்சமநிலை (ZOOM)
ஆரம்பம் 12.03.2021 Fri 7.30pm - 9.00pm
Sun, Tue, Fri 7.30pm - 9.00pm
Wed 6.00pm - 7.30 pm (Questions)

2022 Theory Inorganic நடைபெறுகிறது (ZOOM)
Mon, Wed, Thur, Sat 7.30pm - 9.00pm

(6055)

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வேலை செய்யக்கூடிய 40 - 50 வயதுள்ள வீட்டுப் பணிப்பெண் தேவை. (6111)

☎-077 472 4075

## தேவை

நல்ல நிலையில் உள்ள
- சாளி மோட்டார் சைக்கிள்
- ஒற்றைத் திருக்கல் மாட்டு வண்டில்

என்பன தேவை. (6083)

074 039 8505

தரம் 5 மாணவர்களுக்கான தொடர் பரீட்சைகளும் மதிப்பீட்டின் பின்னான கலந்துரையாடல் விளக்கங்களும். (6083)

தனியாகவும் குழுவாகவும் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

074 039 8505, 077 240 4584

## அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1637)

070 3305500
077 888 9388

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை
பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை
மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-1636)

✆ 0768226240 DHL

## பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS** (C-1606)

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777068777
v2vacancies@gmail.com

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

**A/L 2023 தொழினுட்பப்பிரிவு ஆரம்பம்**

14.03.2021 ஞாயிறு காலை 9.00 மணி

- பொறியியல் தொழினுட்பம்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- உயிர்முறைமைகள் தொழினுட்பம்

(C-1638)

077 017 5346

# New Science World

NEW SCIENCE WORLD VICTORY MUST

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## 2023 A/L Classes

# கணித விஞ்ஞான பிரிவு

## for Tamil and English Medium

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குமரன்<br>திரு. R. குகன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ்<br>திரு. K.T. சிவகுமார் |
| உயிரியல் | திரு. N.T. கஜேந்திரன் |
| இணை. கணிதம் | திரு. S.S. செந்தில்ராஜ்<br>திரு. K. ஐங்கரன் |

சமூக இடைவெளியுடன் நேரடி வகுப்புக்களும் Zoom இன் ஊடான இணைய வழி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.
அனுமதிகள் சமூக இடைவெளியுடன் வழங்கப்படுகின்றது. (C-1649)

ஆரம்பம்:- 15.03.2021 திங்கட்கிழமை

தொடர்புகளுக்கு:- 021 221 6690, 077 336 4055

## BOC TRAVELS (Pvt)Ltd.

Hospital Road, Jaffna.

இலங்கை வங்கியின் துணை நிறுவனமான BOC Travels தனது விமானப் பயணச்சீட்டு கருமபீடத்தை தொடர்ந்தும் இயக்கிவருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். (C-1641)

021 222 4575/76, 070 384 9335, 070 395 1794

## காணி விற்பனைக்கு

நல்லூர், செம்மணி வீதியில் நாயன்மார்கட்டில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (மெயின் றோட்டுடன்)
(இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.) (6112)

☎-077 288 0152
077 623 4204, 077 505 8561

## D.C.M$_N$- யாழ். நகர்

(யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை)

**A/L 2023** கலை, வர்த்தக வகுப்புக்கள்

நாளை 12.03.2021 வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணி

கலைப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்

- தமிழ் - வழமையான முன்னணி ஆசிரியர்

| | | | |
|---|---|---|---|
| புவியியல் | P.S.V. தினேஸ் | ஊடகக் கல்வி | N. தீபன் |
| இந்துநாகரிகம் | T. ஸ்ரீநீஸ் | ICT | லவேந்திரன் |
| அரசியல் | பொன் சந்துரு | நாடகமும் அரங்கியலும் | M. ஐங்கரன் |
| வரலாறு | S.S.Y. பிரதீபன் | கிறிஸ்தவ நாகரிகம் | J.J. வசந்தன் |
| அளவையியல் | T.T. நீதன் | விவசாய விஞ்ஞானம் | B. பாலசுதன் |

வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| பொருளியல் | S. ஜெயக்குமார் |
| கணக்கீடு | S. தவா |
| வணிகக் கல்வி | N.S. கபில் |

(C-6107)

D.C.M$_N$- நிர்வாகி 077 011 9434


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.